# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD
FOR THE PEOPLE”
Isaiah 62 : 10**

**Translated from
BS#900 May-June 2017**

**பொருளடக்கம்**


தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ஏன் வேற்றுமை காணப்படுகிறது ......... 2

வெளிப்புறத்திலும் உட்புறத்திலுமான நம்முடைய சுத்திகரிப்பு ......... 8

இரக்கமும் சத்தியமும்– கிறிஸ்தவ குணாம்சத்தின் முக்கிய கூறுகள் ......... 17

வேதாகம வினா பெட்டி .......... 18



BS Tamil Version - 41

2017

# தேவனுடைய ஜனங்கள் மத்தியில் ஏன் வேற்றுமை காணப்படுகிறது?

Why there is Diversity amongst God's people

**"அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" 1 கொரி. 4:7**

எல்லா மனிதரும் பிறருக்கு விட்டுக் கொடுக்க முடியாத உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களுடன் பிறக்கிறார்கள் என்பது உண்மையாயினும், இது வரையிலும் எந்த ஒரு மனிதனும் பாவமில்லாமல் பிறக்கவில்லை; "**இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்**" (சங். 51:5). ஆதாமுக்குள் மனுக் குலமானது பாவத்தின் கீழாக ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே விற்கப்பட்டு விட்டது என்று வேத வாக்கியங்கள் மிகச்சரியாக அறிவிக்கின்றன. எனவே இந்த கருத்தின் அடிப்படையில் நாம் சுதந்திரமுள்ளவர்களாகப் பிறவாமல் பாவத்திற்கு அடிமைகளாகவே பிறந்திருக்கிறோம். நம்மில் ஒருவரும் சமமானவர்களாகவும் கூட பிறக்கவில்லை. சந்தர்ப்பம், தாலந்து மற்றும் திறமையில் இரண்டு மனிதர்கள், அப்படியே ஒரேமாதிரியாக இருப்பதில்லை. நாம் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபடுகிறோம். தேவன் சிலரை சிறந்தவர்களாகவும். சிலரை மோசமானவர்களாகவும் – சிலரை அதிக ஐசுவரியம் பெற்றவர்களாகவும், சிலரை குறைந்த ஐசுவரியம் பெற்றவர்களாகவும் சிருஷ்டிக்க வில்லை. நாம் மனுக்குலத்தின் ஆரம்பத்தைப் பற்றி வேத வாக்கியம் சொல்வதை எடுத்துக் கொண்டு, தேவன் ஆதாமை பரிபூரணமுள்ளவனாக சிருஷ்டித்தார் என்பதை புரிந்து கொள்கிறோம். மனுக்குலத்தார் மீது சுமத்தப்பட்ட அபூரணங்கள் யாவும் செத்துக் கொண்டிருக்கிற செயல் முறையின் விளைவுகளாயிருக்கின்றன. பாவம் நம் எல்லோரையும் தேவனுடைய உண்மையான சாயலி லிருந்தும், ரூபத்திலிருந்தும், வேறுபட்டுப் போகும்படி செய்திருக்கிறது. சாத்தான் தாயாகிய ஏவாளின் மூலமாக இந்த வேறுபாட்டைக் கொண்டு வந்து விட்டான்.

ஆயினும் நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில், பவுல் அப்போஸ்தலர் இயேசு கிறிஸ்துவுக்குள்ளான ஒரு புதுசிருஷ்டியை – ஒரு புதிய ஒழுங்கையும் – அந்த அங்கத்தினர்கள் மத்தியில் அங்கே வித்தியாசம் இருப்பதை யும் மனதில் வைத்திருக்கிறார். ஒரே மெய்யான சபையிலும் சிலர் அதிகமான தாலந்துகளையும், மற்றவர்களோ கொஞ்சமாகவும் பெற்றிருக்கிறார்கள். சிலர் விசேஷித்த தாலந்துகளையும் மற்றவர்கள் சாதாரண தாலந்துகளையும்




பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு உயர்வான அல்லது குறைவான தாலந்துகள் கொடுக்கப்பட்டதற்கு சாத்தானைக் குற்றப்படுத்த வேண்டியதில்லை. அப்போஸ்தலர் சொல் கிறபடி, தேவனே தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைக்கிறார். அத்துடன், சரீரத்தில் வெவ்வேறான அங்கத்தினர்களை அவரவர் களுடைய இடத்தில் வைத்து, வெவ்வேறு அளவிலான கனிகளைக் கொடுக்கச் செய்வது ஆகிய இரண்டுமே அவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. நாம் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்களாக உருவாக்கப்பட்டிருக்கிறோம். "**உன்னை மற்றவர்களிடமிருந்து விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்?**"

## முயற்சியால் அடைந்தவைகளிலும் வேற்றுமைக்கான காரணம்

இந்த பாடத்தை நாம் படிக்கும்போது, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கருத்துக்கள் யாவும் சுவிசேஷ யுகத்திலிருந்தும், நாம் இப்போது ஜீவிக்கிற விரிவாக்கப்பட்ட அறுவடை காலப்பகுதியிலிருந்துமே கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்வோமாக! புரிந்து கொள்ளுதலின் (உணர்வின்) பரிசுத்த ஆவியில் வளர்ச்சியடைகிற காரியமானது பெருமளவில் ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு, கொண்டிருக்கும் வைராக்கியத்தைப் பொறுத்தே இருக்கிறது. நாம் அவரிடத்தில் இருந்து கற்றுக் கொள்வதற்காகவே கிறிஸ்துவின் பாடசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறோம். சிலர் மிகவும் சீக்கிரமாகவும் மற்றவர்கள் மெதுவாகவும் கற்றுக் கொள்கிறார்கள்; நாம் அவரிடத்தில் கற்றுக் கொள்ளும் அளவுக்குத்தக்கதாக மிகப் பெரிய வாய்ப்புகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்கிறோம். எல்லோருக்கும் பரிசுத்த ஆவியின் பிரகாசிக்கப்படுதல், மனமகிழ்ச்சி, ஊக்கம் ஆகியவை கொடுக்கப்படுகின்றன;

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

எல்லோருக்கும் சில ஆசீர்வாதங்கள் கொடுக்கப் படுகின்றன. கர்த்தருடைய சித்தத்தை அறியவும், அதனைக் கற்று கொள்ளவும் வாஞ்சையுள்ளவர்கள் யாவரும் அதிக வேகமாக வளர்ச்சி அடைவதுடன், அதிக அளவில் பரிசுத்த ஆவியையும் பெற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு வைராக்கியமுள்ள வர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றம் அவர்களை மட்டுமே முற்றிலும் சார்ந்ததாக இல்லாமல், முக்கியமாக தேவனுடைய தயவையும் சார்ந்திருக்கிறது.

அப்போஸ்தலன் மேலும் கூடுதலாக, நீங்கள் தேவனுடைய செய்கையாயிருக்கிறீர்கள் என்று கூறுகிறார்; ''**ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிற வராயிருக்கிறார்.**'' (பிலி. 2:13). இந்த வேலையை நாமாகவே செய்யமுடியாது, நம்மில் கிரியை செய்கிற வல்லமை தேவனுடையது. அவர் மகிமையானதொரு ஆலயத்தை ஆயத்தம் செய்கிறார். இந்த ஆலயத்தின் பிரதான மூலைக்கல்லாக இருக்கப்போவது யாரென்றும், ஆலய வகுப்பின் (சிறுமந்தை) அங்கங்களாக இருக்கப் போகிறவர்கள் யார் என்பதையும் தேவனே ஏற்பாடு செய்திருக்கிறார். நமக்குரிய இடத்தை நாமாகவே தேர்ந் தெடுக்க முடியாது. ஆனால் தேவனுடைய பரிபாலனத்தில், நாம் ஒவ்வொருவரும் ஜீவனுள்ள கல்லாக இருக்கும் படியான அழைப்புக்கு பதிலளித்திருக்கிறோம். ''**இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்**'' (ஏசா. 6:8) என்று பதிலளித்திருக்கிறோம். கற்கள் முதலாவது இருண்ட கல்குவாரியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு அநேக ஆண்டு களாக அவைகள் வடிவமைக்கப்பட்டு, மகிமையான கட்டிடத்தில் வைக்கப்படுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டு வந்தன. பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரும் தன்னுடைய ஆசரிப்புக் கூடாரத்தை (தாபரிக்கும் ஸ்தலம்) தேவன் தங்கும் (இடமாக) வாசஸ்தலமாக ஆயத்தஞ் செய்வது அவனுடைய சிலாக்கிய–மும், கடமையுமாயிருக்கிறது!


## வேறொரு வகையான வேற்றுமை

மாபெரும் திறமைசாலியான கைதேர்ந்த வினைஞன் (சிற்பி) நம்மீது ஓர் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். அவர் நம்மை செதுக்கி வடிவமைத்துக் கொண்டிருக்கிறார். நாம் என்னவாக இருக்க வேண்டுமென அவர் உருவாக்குகிறார். அதன் விளைவாக நாம் பெருமை கொள்வதற்கு ஒன்றுமில்லை. ஒவ்வொருவரிடமும் குறிப் பிட்ட அளவுக்கு தனித்தன்மைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆயினும் அந்த கல்லில் மிக அதிகமான குறுக்கு – வரிகள் இருக்குமாயின், அது தகுதியற்றதாகக் கைவிடப்படும். அப்போஸ்தலன் பேதுரு புத்திமதியாகச் சொல்கிறது போல, ஏற்றகாலத்தில் அவர் நம்மை உயர்த்தும்படிக்கு நாம் தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும். அதே அப்போஸ்தலன், நாம் பெற்றிருக்கிற எல்லா வற்றுக்காகவும், நாம் இருக்கிற நிலைமைக்காகவும் தேவனை நோக்கிப் பார்த்து, அவருக்கு துதி செலுத்த வேண்டும் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகிறார். (1 பேது. 5:6). மேலும், ''**ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன், ஒருவன் உதவி செய்தால், தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக. அவருக்கே மகிமையும், வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்ப தாக**'' (1 பேது. 4:11). நாம் தேவனுடன் உடன் வேலை யாட்களாய் இருக்கிறோம். தேவன் நம்மை நாம் முன்பு இருந்ததிலிருந்து, வேறுபட்ட நிலையில் உருவாக்கியிருப்ப தாலும், மேலும் ஒவ்வொரு நாளும் அதிகமாக வேறுபட்டிருக்கும்படி அவர் நம்மை உருவாக்குவதாலும், நாளுக்கு நாள், அவர் அந்த நல்ல வேலையைத் தொடர்ந்து செய்வதாலும், நாம் அவருடைய சித்தத்தைச் செய்ய நாடுவதாலும், நாம் தேவனுக்கு துதி செலுத்துவோமாக. நம்மாலுண்டான ஏதாவது நம்மிடத்தில் இருக்கிறதா? ஒன்றுமில்லை! தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படி யாமையின் மூலமாக நாம் முழுவதுமாக மரித்தவர் களானோம்; நாம் நித்திய ஜீவனுக்கு எந்த உரிமையும் இல்லாத இந்த நிலைமையில் தான் பிறந்தோம். ஆனால் தேவன் உலகம் முழுவதையும் ஆசீர்வதிக்கும் ஏற்பாடுள்ள ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அழைக்கப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட, தேவனுக்கு உண்மையுள்ள பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு அநேக அம்சங்கள் கொண்ட தம்முடைய திட்டத்தின் ஆசீர்வாதங்களைக் கொடுக்க அவர் முன்வந்திருக்கிறார். அத்துடன் நாம் உலகத்தாருக்கு முன்னதாக, தெரிந்தெடுக்கப்பட்ட இரட்சிப்பின் கீழ் அவரிடம் வரும்படியாக அழைத்திருக்கிறார்.

## கோட்பாட்டு உபதேசங்கள் ஏறக்குறைய முக்கியமானவையே

கிறிஸ்துவின் கோட்பாட்டு உபதேசத்தின் சில குறிப்பிட்ட அம்சங்கள் அடிப்படையானதும், இன்றியமையாதவை களுமாய் இருக்கின்றன. அவைகளில்லாமல், ஒருவரும் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களில் ஒருவராக அவரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். வேறு சில அம்சங்கள் பயனுள்ளதாகவும், உதவிகரமானதும், ஆசீர்வாதமானது மாகக் காணப்பட்டாலும், அவை அடிப்படையானவையல்ல, தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு அவசிய மானதுமல்ல. அடிப்படை விதிகள் நல்லவர்களாலும், பரிசுத்தவான்களாலும், பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் அனுபவித்ததும், தொடர்ந்து அனுபவிக்கப்பட்டு வருகிறதாகவும் இருக்கிறது. பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களாக எதிர்பார்க்கப் படுகிறவர்களாகிய நாம் அதே அடிப்படை விதிகளுக்கு உட்பட்டவர்களாக தொடர்ந்து இருக்கவும், நம்மைப் பலப்படுத்துவதற்காக ''**காலத்துக்கேற்ற போஜனத்தையும்,**'' சத்தியங்களையும், மற்ற சிலாக்கியங்களையும் பெற்றுக் கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். மேலும் ''**பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே, நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங் களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்**''

(எபி. 5:13,14). ஒப்புரவாகுதலின் அடிப்படை கொள்கையைப் பற்றி நாம் பின்வருமாறு ஆராய்வோமாக: (1) ஆதாமின் பிள்ளைகள் எல்லாரும் - எல்லா மனுஷரும் - பாவி களாயிருக்கிறார்கள். (2) ஒருவரும் மீட்பருடைய பலி-யில்லாமல் தேவனிடம் ஒப்புரவாக முடியாது. (3) இயேசு அந்த பலியாகி - பிற்பாடு அந்த மீட்கும் பொருள் விலைக்கிரயத்தை உலகத் தாரின் பாவங்களுக்காகப் பயன் படுத்தவும் இந்த உலகத்திற்கு வந்தார். (4) மீட்பருடைய வேலையில் விசுவாசம் வைப்பதின் அடிப்படையில் விசுவாசி யானவன், “**உங்கள் சரீரங்களை... ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்**” என்ற தெய்வீக அழைப்பை ஏற்றுக் கொண்டு தன்னை தேவனுக்கு ஊழியஞ் செய்-வதற்கு பிரதிஷ்டை செய்யலாம். (5) அவ்வாறு செய்வதால், பிரதிஷ்டை செய்த விசுவாசி அவனுடைய பலியானது பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அதனால் மனமகிழ்ச்சியும், வல்லமையுமுள்ள புரிந்து கொள்ளு தலின் பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தின் ஒரு பங்கை அவன் பெற்றுக் கொள்வான் என்ற விசுவாசத்தின் முழு நிச்சயத்தைப் பயிற்சி செய்யலாம். (6) அப்படியாக இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகிறவர்களையே சகோதரர்கள் என்ற வார்த்தையின் உயர்ந்த கருத்தின்படி ஏற்றுக் கொள்ள வேண்டும்.




“பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே, நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்” (எபி. 5:13,14).

இந்த அளவே முன்பும், இப்பொழுதும் பிரதிஷ்டை செய்த விசுவாசிக்கு அவசியமாயிருந்துவருகிறது. ஆயினும் நாம் அனுகூலமான காலத்தில் ஜீவிக்கிற காரணத்தினால், நாம் அதிக அறிவு பெற்றிருக்கிறோம். நாம் பெரிய சோதனைகளையுங் கூட அனுபவிக்கலாம். அவற்றை நமது மிகுதியான அறிவு ஈடுசெய்துவிடும். எங்குமுள்ள கர்த்தருடைய அருமையான ஜனங்களுக்கு எங்களுடைய அறிவுரை என்னவெனில், மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படை விதிகளுக்கும் அதிகமாக, அவர்கள் ஒருவர் மேலொருவர் எந்த நுகத்தையும் வைக்காதிருப்பார்களாக. ஏனெனில் மற்ற வகைகளில் அவர்கள் சுதந்திர சுயாதீனர்களாக நிற்கிறார்கள்; ஒருவருக்கொருவர் சுயாதீனமாகயிருக்க விட்டுவிடுவதுடன், அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களால் முடிந்த அளவுக்கு ஐக்கியமாகவும், இணக்கமாகவும் இருக்கிறார்கள்.

தன்னுடைய சொந்த கருத்தை வெளிப்படுத்திச் சொன்ன பிற்பாடு, ஒவ்வொருவரும், மற்றவர்களுடைய கருத்துக்களை அமைதியாக கேட்க வேண்டும். ஏற்கெனவே சொல்லப்பட்ட அவருடைய நிலையைக் குறித்து விவாதிக்கவோ அல்லது மீண்டும் சொல்லவோ அழைக்கப் பட்டதாக நினைக்கக் கூடாது. அவன் தன்னுடைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய நிலையில் ஒவ்வொருவரும் சத்தியத்தில் வழிநடத்தவும், போதிக்கவும், சத்தியத்தைக் காண்பிக்கவும், கர்த்தரையே நம்பியிருக்க வேண்டும். அவன் இதைக் காண்கிறது போலவோ, பெரும் பான்மையானவர்கள் அதனைப் பார்க்கும் விதத்திலுங்கூட, ஒவ்வொரு காரியத்தையும் எல்லாரும் காணும்படி செய்ய வற்புறுத்தக்கூடாது. “மிகவும் முக்கியமானவைகளில் ஒருமைப்பாடு; முக்கியமற்றவைகளில் அன்பு” என்பதே பின்பற்றப்பட வேண்டிய சரியான விதியாயிருக்கிறது.

சரிவர சிந்திக்கக்கூடிய மனங் களெல்லாம், கூடுமானால், ஒவ்வொரு வகையான சத்தியத்தையும் பொறுத்த மட்டில், ஒரு முடிவை அடைவதில் பிரியமாயிருக்கின்றன. அப்போஸ் தலன் அறிவிக்கிறபடி, இது சபையின் ஒவ்வொரு அங்கத்தினராலும் - “**அவனவன் தன்தன் மனதிலே**” தனக்காக கடும் முயற்சி செய்ய வேண்டும். ஆயினும் தனிப்பட்ட முறையில் நன்மையான இந்த விதியை, ஒரு சபையில் அல்லது வேதபாட வகுப்பில் பயன்படுத்திப் பார்க்க முயற்சிப்பது - கர்த்தருடைய வார்த்தையின் அர்த்தத்தைப் பொருத்த வரையில் எல்லோரையும் திட்டவட்ட மான ஒரே மாதிரியான முடிவெடுக்க கட்டாயப்படுத்த முயற்சிப்பது ஒரு பொதுவான தவறாக இருக்கிறது. எல்லோரும் ‘கண்ணோடு கண் வைத்துப் பார்க்க’ அதாவது சரியாக பார்க்க வேண்டும் என்று நாம் விரும்புவது சரிதான், ஆனால் எல்லோரும் பூரணத்திலிருந்து விழுந்து விட்டார்கள்; சரீரப்பிரகாரமாய் மட்டுமல்ல, ஆனால் மனதளவிலும் கூட என்பதை நாம் அறியும் போது அதனை எதிர்பார்ப்பது நியாயமானதல்ல. அத்துடன் இம்மாதிரியான பிறழ்தல்கள் அல்லது விலகுதல்கள் வெவ்வேறு திசைகளில் இருப்பது எந்த ஜனக் கூட்டத்திலும் காணப்படுகின்ற பல்வேறு வகை யான தலைகளின் வடிவங்களில் காட்டப்படுகிறது. நம்முடைய பல்வேறு வகையிலான மற்றும் பல்வேறு அளவிலான கல்வியும், ஒரே கண்ணோட்டம் உடையவர் களாயிருப்பதற்கு உதவி செய்வதில் அல்லது தடை செய்வதில் முக்கியமான காரணிகளாக இருக்கின்றன. இந்த அடிப்படை விசுவாசத்திற்கு மேலானவற்றின் மீது ஒருவருக்கொருவர் தன் கருத்தை திணிக்கும் ஒரு மனநிலை இருக்குமானால், அத்துடன் அந்த இரண்டு பிரிவினரையும் அவர்களுடைய முன்னேற்றத்துக்காக பிரித்து விடுவது அவசியமாகக் கருதப்படுமானால், பின்பு சந்தேகமின்றி, அவர் களுக்கிடையே தொடர்ச்சியான சச்சரவுக்கு மாறாக, பிரிக்கப்படுவது ஞானமுள்ள போக்காக இருக்கும். எவருடைய கருத்துக்களையும் நாங்கள் குறைகூறவில்லை, ஒவ்வொருவனும் வேதாகமம் போதிக்கிறதாக அவன் நம்புகிற எதையும் பற்றிக் கொள்ள பூரண உரிமையைப் பெற்றிருக்கிறான்.

(இந்த பத்தி, முதன்மையாக கிறிஸ்துவின் மணவாட்டிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது). எங்களுடைய

கருத்துக்கள் எங்களுடைய வாசகர்கள் எல்லாராலும் சந்தேகமின்றி நன்கு அறியப்பட்டிருக்கின்றன. சுருக்கமாக பின்வருமாறு அவைகள் கூறப்பட்டுள்ளன: (1) அதாவது பாவஞ்செய்த ஒருவன் - ஆதாம் மட்டுமே. அதனால் அவனும், அவனுடைய சந்ததியார் எல்லோரும் பாவத்திற்குள்ளாயினர். (2) அதன்படி, ஒரு மீட்பர் தேவைப்பட்டதால் இயேசு அந்த மீட்பரானார், “**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்தார்**” (3) தேவன் மீட்கப்பட்ட பாவிகளில் சிலரை மீட்கும் பொருள் கிரயமாக்க அல்ல, ஆனால் மீட்பருடைய உதவியாளர்களாயிருக்கவும், அவருடைய மணவாட்டியாகவும் அழைத்திருக்கிறார். (4) அவர்கள் ஐக்கியமாயிருப்பதற்கான வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்த விதிகள் யாதெனில், இயேசு மாபெரும் பரிந்து பேசுகிறவராக, அவர்களைத் தம்முடைய அங்கத்தினர்களாகவும், அவர்களுடைய மாம்சத்தை தன்னுடைய மாம்சமாகவும் ஏற்றுக் கொள்வார். அவர்களுக்குத் தம்முடைய புண்ணியத்தின் பங்கை சாட்டுதல் செய்வார். அது ஆதாமின் சந்ததியின் அங்கத்தினர்களான அவர்களிடம் வந்து சேரும். அதன் பின்பு அவர்கள் (அவருடைய மணவாட்டி பரம்பரையாகப் பெற்றிருக்கும் எல்லா குறைபாடுகள், பலவீனங்கள் மற்றும் அபூரணங்கள் ஆகியவற்றிலிருந்து நீதியின்படி நீதிமான்களாக்கப் படுவார்கள்; அத்துடன் அவர்களுடைய சுயசித்தங்கள் மற்றும் அவர்களிடத்தில் மீந்திருக்கிற எல்லா வல்லமைகளும், தாலந்துகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால், அவர்களுடைய பலியானது மகா பிரதான ஆசாரியரால் பாவ நிவாரணபலியின் பகுதியாக தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும். (5) மீட்பருடைய மரணத்தில் பங்கு பெறுவதால், அவர்கள், முதலாம் உயிர்த்தெழுதல் மூலமாக அவருடைய ஜீவனில் பங்கடையும் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர். மீட்பர் இப்பொழுது தம்முடைய புண்ணியத்தை உலகத்தாருக்கு பயன்படுத்தவில்லை.





ஜீவியத்தில் மிகவும் முக்கியமானவர், தேவன்
ஆடையில் மிகவும் அழகானது, புன்னகை
மாபெரும் சொத்து, விசுவாசம்
மிகவும் வல்லமையான ஆற்றல், அன்பு

அநேகர் சபையின் பலிக்கு அதிகமான மதிப்பு கொடுத்து தவறு செய்கிறார்கள் என்பது எங்களின் கருத்தாயிருக்கிறது. அதே சமயம், மற்ற அருமையான சகோதரர்கள், சபையின் பலியில் எந்த மதிப்பையும் காணாமல், எஜமானருடைய பலியில் பங்கு பெற அவள் அனுமதிக்கப்படவில்லை என்ற தவறை செய்கிறார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். ஒரு உச்சத்திலிருந்து அடுத்த உச்சத்திற்கு ஆடுகிற ஊசலைப்போல இது எங்களுக்குத் தோன்றுகிறது. ஆனால் இந்தக் காரியத்தைக் குறித்து நாங்கள் கூறியபடி எங்கள் கருத்து மையத்தில் இருக்கிறது. நம்முடைய போதகர் சார்லஸ் T. ரஸல் அவர்கள், தேவனுடைய திட்டத்தின் “இடை நிகழ்வான அம்சம்” என்ற பதத்தைப் பயன்படுத்தினார், அதற்கு இது ஒரு உதாரணமாகும்: “**பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிறவர்களாகிய முதற்பேறானவர்களின் சபையின்**” விடுதலையுடனும், யார் கிறிஸ்துவுடன் “அவருடைய உயிர்த்தெழுதலில்” முதலாவது அல்லது பிரதான உயிர்த்தெழுதலில் பங்கடைகிறார்கள் என்பதுடனும் தெய்வீக திட்டம், முடிந்து விடுவதில்லை. கிறிஸ்துவின் பலி புண்ணியம் முதலாவதாக சபையாருக்கு சாட்டுதல் செய்யப்படுதல் தெய்வீக திட்டத்தின் ஓர் இடை நிகழ்வான அம்சமாக மட்டுமே இருக்கிறது.(R 4555). இயேசுவை உலகத்திற்கு அனுப்பியதில் தேவனுடைய உண்மையான நோக்கம் “**அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே**” ஆகும் - சபையின் இரட்சிப்பு அல்ல! என்று வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன, சபை இரட்சிப்பு என்பது அதைச் சார்ந்த ஓர் இடை நிகழ்வான அம்சமாக இருந்தது. [S.M -(ரசல் போதகருடைய பிரசங்கங்கள் என்ற புத்தகம்) பக்கம் - 48].

நாம் இப்போது ஆயிரவருட யுகத்தின் இரண்டாவது நூற்றாண்டில் இருப்பதாலும், தேவன் தம்முடைய உண்மையான பிரதிஷ்டை செய்த விசுவாசிகளுக்கு ரஸல் போதகருடைய போதனைகளின் அடிப்படையில் அதிக முன்னேற்றமான சத்தியத்தைக் கொடுப்பதாலும் ஒருவருக்கொருவர் கூட்டங்கூடி பிரிவினைக்குள்ளாகப் போக வேண்டாம். வேதாகமம் நீதி 4:18-ல் சொல்லுகிறபடி “**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்.**” பைபிள் ஸ்டாண்டர்ட் மினிஸ்ட்ரீஸ்-க்கு [LHMM], ஒரு சிறப்பான வரலாறு உண்டு. அது ரஸல் போதகருடைய ஏற்றகால பரோஷியா சத்திய போதனையுடன் ஆரம்பித்தது. அதில் முதன்மையான போதனை-கிறிஸ்து ஒரு மணவாட்டியைப் பெற்றிருக்க வேண்டும் என்றும், அவர்கள் பாவிகளாகிய உலகத்தார் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள ஒரு வாய்ப்புடன் நீதியின் கோட்பாடுகளை அறிந்து கொள்ளும் படியாகக் கொண்டு வருவதில் மீட்பருக்கு உதவி செய்கிறவர்களாக இருப்பார்கள் என்பதுமாகும்.

ஏற்ற கால சத்தியம் அதிகமாக தேவைப்படுகிறதா? ஆம்! நோவாவுக்கு கொடுக்கப்பட்டதைவிட ஆபிரகாமுக்கு அதிகமான சத்தியம் தேவைப்பட்டது; நோவா நடந்து சென்றதற்கும், அப்பாலிருந்த வெளிச்சத்தில் அவர் நடக்க வேண்டியிருந்தது. மோசேக்கும், அவனுடைய நாளிலிருந்த இஸ்ரயேலர்களுக்கும் இன்னும் கூடுதலான சத்தியம் தேவைப்பட்டது. தேவன் அவர்களுக்கு அதைக் கொடுத்தார். இன்னமும் அது பொது மக்களிடையே பிரபலமாகாதிருந்தாலும் அதனை விசுவாசத்துடன் பற்றிக் கொண்டவர்கள் மீது துன்பங்களைக் கொண்டு வருவதாக இருக்கிறது. அதன்பின்பு தேவனுடைய திட்டத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கும், அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களின் விசுவாசத்தைப் பரீட்சிப்பதற்கும்




(எபி. 11:32-40) தேவைக்கேற்றபடி தீர்க்கதரிசிகள் மூலமாக கூடுதலாக சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது.

எபிபெனி சத்தியம் முன்னுக்கு கொண்டுவரப்பட வேண்டிய காலம் வந்தபோது, தேவன் ரஸல் போதகரின் மிகச் சிறந்த திறமையான உதவியாளர்களில் ஒருவரான போதகர் பால்.S.L. ஜாண்சன் அவர்களை பிரதிஷ்டை செய்தவர்களுக்கு, ஏற்றகால சத்தியத்தை (நிகழ்கால சத்தியம்) அளிக்கும் அவருடைய விசேஷித்த தூதுவராகத் தேர்ந்தெடுத்தார். நாம் கிரீடம் இழந்த தலைவர்கள், திரள் கூட்டத்தார், வாலிபரான பாத்திரவான்கள் பற்றியும், மேலும் இதற்கு முன்பு அவ்வாறு அறிந்து கொள்ளப்படாத காலகட்டங்களின் விசேஷித்த தன்மைகளைப் பற்றியும் அதிகமாக கற்றறிந்து கொண்டோம்: 1954 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்துக்குப் பின்பு, அதுவரை செய்யப்பட்டிராத, விசேஷமான ஒரு ராஜ்ய வேலை தொடங்கி வைக்கப் படவிருந்தது. அதாவது எபிபெனி பாளயத்தை, எபிபெனி பிரகாரத்திலிருந்து பிரித்துக் கட்டுவது. வருகிற புது உடன்படிக்கையின் கீழ் இழந்து போனதைத் திரும்பப் பெறுகிறவர்களை ஆசீர்வதிப்பதற்காக உபத்திரவ காலத்தின் பிந்தின பகுதிகளில் வருகிறதான ஜனங்களை கர்த்தர் இங்கு ஆயத்தம் செய்கிறார்.

காலத்துக்கு ஏற்ற சத்தியம் ஜாண்சன் போதகருடைய மிகவும் தனித்தன்மை கொண்ட போதனைகளோடு முடிந்துவிட்டதா? இல்லை! முன்னேறிவரும் சத்தியம், கடந்த கால மறைபொருள்களைத் தெளிவாக்குகிறது. நம்முடைய மகா தேவன், ரஸல் போதகர் மற்றும் ஜாண்சன் போதகருக்கு விசேஷித்த உதவியாளராக இருந்த ரேய்மண்ட் G. ஜாலி போதகரின் மூலமாக வெளிக்கொண்டு வருவதற்காக அதிகமான புதிய சத்தியத்தை வைத்திருந்தார். ஜாலி போதகருடைய ஊழியம் சில வழிகளில் ரஸல் போதகர் மற்றும் ஜாண்சன் போதகருடைய ஊழியத்தைக் காட்டிலும் விரிவான நோக்கமுடையது. ஒன்றோடு ஒன்று இணைந் துள்ள, பரோஷியா, எபிபெனி மற்றும் பெசலியா காலத்தின் ஏற்றகாலத்து சத்தியத்தை உள்ளடக்கியிருந்தது. காலத்துக்கு ஏற்ற சத்தியத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் சிலாக்கியமும், கடமையும், ஆசரிப்புக் கூடாரம் பற்றியதும் முக்கியமாக, பிரகாரம், திரை பற்றிய முன்னேறி வரும் சத்தியத்தை விளக்கிச் சொல்லவும்,எபிபெனி பாளயம் குறித்து அதிகமாகத் தேவைப்படுகிற புரிந்து கொள்ளுதலும் அவருக்கு கொடுக்கப்பட்டது. ஆம், அதிக இடை நிகழ்வான அம்சங்கள்!

சத்திய இயக்கங்களைச் சேர்ந்த அநேகர் புதிய சத்தியம் இனி இல்லை என்று போதித்து வந்த அதே வேளையில், நம்முடைய மகா யேகோவா தேவன் உண்மையாகவே, தமக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு அதிகமாக முன்னேறிச் செல்லுகிற சத்தியம் கிடைக்கத் தக்கதாக ஒழுங்கு செய்திருந்தார். ஆம், யேகோவா தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். திரும்பிப் பார்க்கும் போது, முன்மாதிரியாகத் தொடர்ந்து வந்த ஊழியக்காரர்களையும் மற்றும் இந்த முறையில் முன்னேறிக் கொண்டிருக்கும் சத்தியத்தை வெளிக்கொண்டு வருவதையும் நாம் காணலாம். ஜாண்சன் போதகர் மற்றும் ஜாலி போதகரின் விசேஷித்த உதவியாளரான சகோ. ஆகஸ்ட் கோல்கியுடன், அது தொடர்ந்து வந்தது. ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட முந்தின மூன்று தலைவர்களால் நம்முடைய கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட சத்தியத்தை கோல்கி போதகர் தொடர்ந்து பாதுகாத்து வந்தார். கோல்கி போதகருடைய வழிகாட்டு தலுடன், தேவனுடைய இயக்கத்தின் வாலிபரான பாத்திரவானின் தலைமைக்குள்ளாக நாம் பிரவேசித்தோம். பெர்னார்ட் W. ஹெட்மன் போதகரை தேவன், சகோ. ஜாண்சன், சகோ. ஜாலி மற்றும் சகோ. கோல்கி ஆகியோரின் முக்கியமான உதவியாளராக ஏற்படுத்திய போது, இயக்கமானது (விரிவாக்கப்பட்டிருக்கும் சுவிசேஷ யுகத்தின்) அறுவடையின் ஒன்றுடன் ஒன்று பிணைந் திருக்கும் வேலைக்குள் 111 வருடங்கள் மேற்சென்று கவிந்திருந்தது. ஹெட்மேன் போதகர் நம்முடைய எழுத்துக்களில் நிறைவேறுதலான யோபுவின் (ஜான்சன் போதகர்) ஏழு முக்கியமான உதவியாளர்களின் அட்ட வணையில் கடைசியானவராக குறிப்பிடப்பட்டுள்ளார். (PT 1952, பக்கம் 70).

சகோ. பெர்னார்ட் W. ஹெட்மேன் அவர்களுடைய மரணத்தின்போது (ஜனவரி 30, 2004), இதற்கு முன்பு ஒருபோதும் நடந்திராத ஒரு யுகமாறுதலின் காலத்தை தேவன் புதிதாக தொடங்கி வைத்தார். ஹெட்மேன் போதகரின் மரணத்தின் போது அடுத்த நிர்வாக தலைமைப் பொறுப்பாளர் மற்றும் தேவனுடைய வீட்டின் அடுத்த தலைவராக யார் இருக்க வேண்டும் என்பது பற்றி நிலவிவந்த தெளிவற்ற கருத்தை ஒழுங்குபடுத்த முக்கியமான ஊழிய நடைமுறை சார்ந்த கூட்டத்திற்கு, அழைப்பு விடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது: வாலிபரான பாத்திரவான் என்ற நம்பிக்கையுள்ளவரா அல்லது பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரராக தேர்வுபெறக் கூடியவரா என்று முடிவு செய்ய வேண்டிய திருந்தது.

இந்த கூட்டத்தின் முடிவு, வாலிபரான பாத்திரவான் என்ற நம்பிக்கையுள்ளவரான ரால்ஃப் ஹெர்ஸிக் போதகர் அவர்கள் சபையாருக்கு முன்பாக ஓட்டெடுப்பு மூலம் அங்கீகாரம் பெறவேண்டி இருந்தது, அது அவருக்கு அனுகூலமாக நிறைவேற்றப்பட்டது. ஹெர்ஸிக் போதகர் மீண்டும் அலுவலக பணிக்கு திரும்பி வந்து, முடிவான காலப்பகுதியில் மெய்யான “ஜாமக்காரர்களை”

(விழிப்புள்ளவர்களை) உள்ளடக்கிய நிறைவேறுதலான ஆபகூக் பற்றி விரிவாக எழுதி வாலிபரான பாத்திரவான்கள் தலைமைப் பதவியில் நிறைவடைதல் பற்றி நமக்கு போதித்தார். ஹெர்ஸிக் போதகர் செயலிழந்த நிலை யிலிருந்த கடைசி மூன்று வருட காலப் பகுதியாகிய, இந்த யுகமாறுதலின் காலம் அதனுடன் சில பலமான அபிப் பிராயங்களையும், நிச்சயமின்மையையும் கொண்டுவந்தது. ஹெர்ஸிக் போதகர் உயிரோடிருக்கும்பொழுதே பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர் என்ற நம்பிக்கையுள்ளவர் தலைவராக செயல்படுவது சில சகோதரர்களுக்கு ஆறுதலளிக்கவில்லை. ஆயினும் இதைக் குறித்து ஜாலி போதகர் அவர்களால், P.T 1960 பக்கம் 63-ல் தெரியப் படுத்தப்பட்டுள்ளது. ''பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக் காரரை வாலிபரான பாத்திரவான்களின் தலைவராக நிச்சயமாக, கர்த்தர் நியமிக்க மாட்டார். ஏனெனில் இது குறித்து ஜாண்சன் போதகர் அவர்கள் வேதவாக்கியங் களிலிருந்து சுட்டிக் காட்டியிருக்கிறார். (யாத் 19:12-21; E.Vol. 11, பக்கம் 336,339 -342). கீழ்ப்பட்ட வகுப்பாரி லிருந்து ஒருவரை மேலான ஒரு வகுப்பாருக்கு மேலான நிலைமையில், நிர்வாகப் பணி பொறுப்பில் செயல்பட நியமிப்பது தேவனுடைய ஒழுங்கு முறைகளுக்கு முரண்பட்டதாயிருக்கும். திரள் கூட்டத்தாரின் பூமிக்குரிய குடியிருப்பு முடிவடைந்த பிறகு தேவன் தம்முடைய ஜனங்களை ஒரு தலைவர் இல்லாமல் துயரமான இருளில் சுற்றித் திரியும்படி கைவிடவில்லை. அவர்களுடைய தேவைகளுக்குத் தகுந்த நிகழ்கால சத்தியத்தை மென்மேலும் திறந்து கொடுக்காமலும் அவர்களைப் பாதுகாப்பில்லாமலும் கொழித்தல்காரர்களின் தயவுக்கு விட்டுவிடவுமில்லை''. PT 1978, பக்கம் 87, ''திரள்கூட்டம் தனது பூமிக்குரிய ஓட்டத்தை முடித்த பிறகு, நம்முடைய கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு விசேஷித்த மேய்ப் பனுடைய பராமரிப்பை வாலிபரான பாத்திரவான்கள் மூலம் கொடுத்தார். வாலிபரான பாத்திரவான்கள் தங்கள் ஓட்டத்தை இந்த ஜீவியத்தில் முடித்த பின்பு, அவர் அதே பராமரிப்பை பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் மூலமாக தொடர்ந்து கொடுப்பார் என்பதில் நாங்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.''

திரள்கூட்ட வகுப்பார் ஆவிக்குரிய நிலைமையில் தங்களுக்குரிய உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொண் டார்கள். அப்படியே வாலிபரான பாத்திரவான்கள், ''மேன்மையான உயிர்த்தெழுதலில் (எபி. 11:35) மூப்பரான பாத்திரவான்களுடன் பங்கடையும்படிக்குத் தங்களைப் பாத்திரவான்களாக நிரூபிக்க'' தங்கள் ஓட்டத்தை முடித்துக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் தங்களுடைய ராஜ்ய மகிமைக்காக ஆயத்தம் செய்யப்பட்டு வருகிறார்கள். இந்த வகுப்பாரெல்லாரும்,தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களாக இருப்பதுடன், அவருடைய பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதாலும், தங்கள் விடுதலைக்காக காத்திருந்து தங்களுக்குள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுடைய புரிந்து கொள்ளுதலாய் இருக்கிறது. (PT 1969, பக்கம் 36).

சகோ. ஹெர்ஸிக் அவர்கள் இந்த யுகமாறுதலின் காரியம் பற்றிய விளக்கத்தைக் குறித்து, மே 18, 2012-ல் மஸ்கீகன் ஊழிய நடைமுறை சார்ந்த கூட்டத்திலும் பேசியிருக்கிறார். அதின் ஒரு பகுதியை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன்: ''நான் இந்தப் பதவியில் இனி ஒரு போதும் செயல்பட முடியாமற்போகும் நிலைமைக்கு பிற்பாடு, கர்த்தருடைய ஜனங்களுக்கு செயல்திறன்மிக்க தலை வராகவும், நிர்வாக முதன்மை பொறுப்பாளராகவும் (Executive Trustee) இருக்கும் படியாக, கர்த்தருடைய வழிநடத்துதலைப் பின்பற்றி இங்கே அமெரிக்காவிலிருந்து, இரண்டு சகோதரர்களை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன், இந்த ஒழுங்கு ஏற்பாடு செய்யப்பட்டதற்கு உடல் நலம் சம்பந்தப்பட்ட காரியம் ஒரு காரணமல்ல, ஆனால் இப்போது நான் 87 வயதுள்ளவனாகையால், இந்த ஒழுங்கு ஏற்பாடு சிறந்தது என்று எண்ணுகிறேன், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை எழும்பும்போது அந்த இடத்தை நிரப்பும்படி சகோ. லியான் ஸ்நைடர் முதலாவது தேர்ந்தெடுப்பாக இருக்கிறார், மேலும் சகோ. டேனியல் ஹெர்ஸிக் இந்த பணிக்கு உதவியாக இருப்பார்.

நான், சகோ. ரால்ஃப் ஹெர்ஸிக் அவர்களுக்கு விசேஷித்த உதவியாளர் என்ற வகையில், இந்த யுகமாறுதலின் காலகட்டத்தின் போது, அடுத்த நிர்வாக முதன்மை பொறுப்பாளர் மற்றும் கர்த்தருடைய ஜனங்களின் தலைவரை, தேவன் தாம் நியமித்த வழியில் முன்னோக்கிச் செல்ல ஏற்படுத்தியிருக்கிற ஏற்பாட்டை எதிர்க்கிற நோக்கம் எனக்கில்லை. தேவன் மட்டுமே தம்முடைய தலைவர்களை, நிர்வாக முதன்மை பொறுப்பாளராக (Executive Trustee) பதவியில் இருப்பவர் மூலமாக நியமனம் செய்கிறார் என்று எங்களுடைய எழுத்துக்கள் போதிக்கின்றன. சகோ. ரால்ப் அவர்களிட மிருந்து அன்று மாலை 6 மணிக்கு தொலைபேசி மூலமாக வந்த அழைப்பு எனக்கு மிகவும் நன்றாக நினைவிருக்கிறது, அதில் எந்த உரையாடலுமில்லை, அவரது குரல் பலவீனத்தில் தடுமாறி: ''லியான், வேதாகம வீட்டுக்கு நீங்கள் அவசியம் வரவேண்டும், இனி என்னால் தனியாக இதனைச் செய்யவே முடியாது!!'' என்று கூறியது. இதுவே எனக்கு வந்த அழைப்பாக இருந்தது, அதற்கான என்னுடைய பதில் சகோ. ரால்ஃப் அவர்களிடம் ''ஆம்'' என்பதாகவும், கர்த்தரிடமோ ''**இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்**'' என்பதாகவும் இருந்தது. (ஏசா. 6:8).

நாம் இந்த விரிவுபடுத்தப்பட்ட சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் ஏற்ற கால சத்தியத்திற்கு ஊழியஞ் செய்து தொடர்ந்து ஜீவிக்கிறோம். நிச்சயமாகவே கர்த்தர் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர் தலைமையின் கீழ் செய்து முடிக்க வேண்டிய அதிகமான வேலையை வைத்திருக்கிறார். மேலும் நமது தேவைகளுக்குப் பொருத்தமான நிகழ்கால சத்தியத்தை மேன்மேலும் வெளிப்படுத்துகிறார்! நம்முடைய நிகழ்காலத்துக்குரிய உபதேசங்கள் குறைந்த முக்கியத்துவமுள்ளவைகளாக இருக்கலாம். அதே நேரத்தில் அவைகள் நம்முடைய தேவைகளுக்கு மிகவும் பொருத்தமானவைகள். தமக்கு ஏற்ற சமயத்தில், நம்முடைய தேவைகளுக்கு மிகவும்

அத்தியாவசியமான பாடங்கள் கிடைக்கும்படிச் செய்வார் என்பதில் நான் உறுதியாயிருக்கிறேன். எனக்கு அன்பான சகோதரர்களே, நாம் பெற்றிருக்கும் இந்த ஐசுவரியமான வாரிசு உரிமைக்கு இசைவாக நமக்கு இந்த நாளில் கொடுக்கப்பட்டுள்ள வேலையில் – நாம் முன்னோக்கிச் செல்லும் அதே வேளையில் எல்லா காரியங்களிலும், தேவனுடைய சித்தமே செய்யப்பட வேண்டுமென ஜெபியுங்கள். எழுச்சிமிக்க இந்த யுகமாறுதலின் கால கட்டத்தின் போது ஆயிரவருடயுகத்துக்கு முந்திய ஆபிரகாமின் வித்தாக, நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடும்போது கலக்கமில்லாத, அமைதியுள்ளவர்களாயிருக்கவும் நாடுவோமாக! பிலி 4:7–ஆம் வசனம் நாம் ஒவ்வொரு நாளும் களிகூருவதற்கு ஏற்ற அழகான ஒரு செய்தியைக் கொடுக்கிறது, ‘‘**அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம், உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.**’’ சகலத்தையும் சிருஷ்டித்த தேவன் தாமே சகலத்தையும் தாங்கி காத்துக் கொள்ளவும் வல்லமையுள்ளவராயிருக்கிறார். ***

# வெளிப்புறத்திலும் உட்புறத்திலுமான - நம்முடைய சுத்திகரிப்பு

## Our Cleansing-Outward and Inward

‘‘**இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.**’’ (2 கொரி. 7:1).

தேவ தாகமம் உலகத்தாருக்கு அல்ல, ஒரே மெய்யான சபைக்கும்; அவிசுவாசிகளுக்கல்ல, ஆனால் விசுவாசிகளுக்கும்; பாவிகளுக்கு அல்ல, ஆனால் பாவத்திலிருந்து ஏற்கெனவே மனந்திரும்பியிருப்பவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த உண்மையை அநேகர் காணத் தவறிவிடுவதின் பலனாக, அவர்களுடைய மனங்களில் குழப்பம் ஏற்படுகிறது. அந்த நிருபம் “**கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும், அகாயா நாடெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்**” என்று சொல்லப்பட்டிருந்தாலும், நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம் பாவிகளுக்கும், அதைப்போலவே பரிசுத்தவான்களுக்கும் – முக்கியமாக பாவிகளுக்குப் பொருத்தமாயிருக்கிறது என்று சொல்லுகிற மனப்பான்மையுடையவர்களாய் சிலர் இருக்கிறார்கள். (2 கொரி. 1:1). நாங்கள் அதற்கு இல்லையென்று பதிலளிக்கிறோம். நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தை பொதுவாக தேவனிடம் இதுவரை வந்து சேராமலும் தங்களுடைய பாவங்களிலிருந்து இன்னும் மனந்திரும்பாமலும் மற்றும் மன்னிக்கப்படாமலும் இருக்கிற பாவிகளுக்கு உரியதாகப் பயன்படுத்த முடியாது. தேவன் அப்படிப்பட்டவர்களுக்கு எந்த வாக்குத்தத்தத்தையும் ஏற்படுத்தவில்லை; அவர் அவர்களை முற்றிலும் பாவிகள் என்று வெளிப்படையாக அறிவித்து, அனைத்து அங்கீகாரத்தையும் அனைத்து ஐக்கியத்தையும் கொடுக்க மறுத்து, இயேசுவின் இரத்தத்தின் புண்ணியத்தில் விசுவாசம் வைப்பதின் மூலமாக அல்லாமல் (அப். 4:12) அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்படையும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்றும் அவர்களுக்குக் கூறுகிறார். வேறு விதமாகச் சொன்னால், தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கிற மகாபெரிய பாவ நிவாரண பலியை ஏற்றுக் கொள்ள முடியாத அல்லது ஏற்றுக் கொள்ளாதவர்களுடன் எவ்விதமான ஈடுபாடுகளையும் வைத்துக் கொள்ள அவர் மறுத்து விடுகிறார். இந்த கருத்தை இயேசுவும், ‘‘**என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்**’’ (யோவா. 14:6) என்று வெளிப்படுத்தினார்.

தெய்வீக நிலையின் நியாயவிவாத தன்மையானது சிந்திக்கப்பட்ட கருத்துக்களின் மீது வெளிப்படையாயிருக்கிறது. தேவன் சுவிசேஷயுகத்தின் பொழுது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வகுப்பாரை உலகத்திலிருந்து கூட்டிச் சேர்த்தார். அவர்களுடைய சிறப்படையாளமான குணாம்சமானது தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதும், அவரைப் பிரியப்படுத்த வாஞ்சிப்பதுமாகும். இந்த கூட்டிச் சேர்க்கும் வேலையானது, இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலின் காலத்துக்கு முன்பாக பிரதிஷ்டை செய்த அனைத்து ஐந்து வகுப்பார்களும் முழுமையாக நிறைவடையும் வரைக்கும் விரிவாக்கப்பட்ட சுவிசேஷயுக அறுவடையிலும் தொடர்ந்து நடைபெறும். இந்த வேலை முறையே சீயோன், மோரியா, ஆக்ரா, பெசித்தா மற்றும் ஒப்பேல் போன்ற மலைகளால் அடையாளப்படுத்தப் பட்டபடியே சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள் கூட்டத்தார், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது.

வந்து கொண்டிருக்கிற யுகமாகிய கிறிஸ்துவின் ஆயிர வருட யுக மத்தியஸ்தர் ஆட்சியில், தேவன், மீதமுள்ள மனுக்குலத்தாருடன் ஈடுபாடு கொள்ள நோக்கம் கொண்டிருக்கிறார். அப்பொழுது, அவருடைய தேவைகள் எல்லாம் மிகவும் தெளிவாக்கப்படும். அதனால், அந்த வழியிலே நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும், திசைகெட்டுப் போவதில்லை (ஏசா. 35:8). நீதியின் சூரியன்

அந்த மகிமையான ஆயிரவருட யுக நாளில் பிரகாசிக்கும். அப்பொழுது அது தவறானதிலிருந்து சரியானதை தெளிவாக வெளியரங்கமாக்கி, தேவனுடைய குணாம்சத்தையும், குணப்பண்புகளையும் வெளியரங்கமாக்கும். அதனால் ஒவ்வொரு சிருஷ்டியின் கண்களும் காணும் – ஆம், தீர்க்கதரிசியால் தெளிவாகச் சொல்லப்பட்டபடியே குருடான கண்கள் யாவும் திறக்கப்படும், செவிடான காதுகள் யாவும் திறவுண்டு போம். (ஏசா. 35:5;40:5).

ஆயிர வருட யுகத்துக்கு முந்தைய ஆபிரகாமின் வித்திற்கு கர்த்தர் தேர்ந்தெடுக்கிறதான ஓர் விசுவாச பரீட்சை இருக்கிறது. தேவைப்படுகிற விசுவாசத்தை யாரெல்லாம் பயிற்சி செய்யாதிருக்கிறார்களோ, அவர்கள் இந்த தெரிந்தெடுக்கப்படும் இரட்சிப்புக்குரியவர்கள் அல்ல, ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் அரசாட்சியின் போது ஆபிரகாமின் வித்தின் கரங்களில் தங்களுடைய ஆசீர்வாதத்திற்காக காத்திருக்க வேண்டும். அதற்காகவே, நாம் இப்போதும், “**உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதைப் போல பூமியிலும் செய்யப்படுவதாக**” (மத். 6:10) என்று ஜெபிக்கிறோம்.

## தேவனுடைய ஜனங்கள் எல்லோருமே இயற்கையாகவே உயர் குணமுடையவர்களல்ல

தேவன் தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க அவசியமான ஓர் குணக்கூறாக விசுவாசத்தை மட்டுமல்லாமல், கூடுதலாக நீதியின் மீதுள்ள அன்பையும், இந்த பரீட்சையின் ஒரு பகுதியாக ஏற்படுத்தியிருக்கிறார். உலகத்தின் பாவங்களுக்கான மீட்பின் விலைக்கிரயமாக கிறிஸ்துவின் மரணத்தை ஏற்றுக் கொள்கிற விசுவாசக் கண்களை மட்டும் நாம் கொண்டிருந்தால் போதாது; தெய்வீக தயவுக்குள்ளாக வருவதற்கு நீதியை நேசிக்கிற இருதயமும், கூடுதலாக நமக்குத் தேவைப்படுகிறது. நீதியில் அன்பு கூருகிற இருதயமானது அதன் சொந்த மாம்சத்தின் பலவீனங்களையும், அதன் கீழ்நோக்கிச் செல்லக்கூடிய போக்குகளையும், பகுத்தறிகிறது. இயேசுவே மீட்பர் என்று அந்த இருதயம் அறிந்து கொண்ட உடனேயே அது அவரிடம் ஓடி வருகிறது. அதன் கடந்த கால பாவங்கள் சம்பந்தமாக அவருடைய புண்ணியத்தால் மூடப்படுவதற்காக மாத்திரமல்ல, சாட்டுதல் செய்யப்பட்ட அவருடைய நீதியினால் துணிகரமற்ற குற்றங்கள் மற்றும் தற்கால எதிர்கால அபூரணங்கள் – அதாவது சித்தத்திற்கு எதிரான மற்றும் மரபுரிமையாகப் பெற்ற பலவீனங்களினால் உண்டான விளைவால் வரும் அபூரணங்கள் சம்பந்தமானவைகள் மூடப்படுவதற்காகவும் அவரிடம் ஓடி வந்துவிடுகிறது.

உலகத்தாரின் பாவங்களுடனோ அல்லது தங்களுடைய சொந்த பலவீனங்களுடனோ இசைவில்லாதவர்களாக இருக்கிற அப்படிப்பட்டவர்களையே நமது கர்த்தர் தம்முடைய செய்தியில், “**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!** (பாவநுகத்தின் கீழாகவும், அதன் தண்டனையான மரணத்தைப் பற்றி தெளிவாகவும் உணர்ந்து கொண்டவர்கள்), **நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்**” (மத். 11:28,29) என்று அழைக்கிறார். கற்றுக் கொள்ளுகிறவர்கள் – சீஷர்கள், கிறிஸ்துவின் பாடசாலையிலுள்ள இந்த மாணவர்களே, நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம் குறித்துக் காட்டுகிற வகுப்பாராயிருக்கிறார்கள். பொதுவான உலகத்தாரை, மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள எல்லா அசுசிகளையும் நீக்கி சுத்திகரித்துக் கொள்ளும்படி புத்திசொல்லுவது பயனற்றதாயிருக்கும். ஏனெனில் அவர்கள் அந்த அசுசிகளையே ஆதரிக்கும் போக்கு உள்ளவர்களும் தங்களை சுத்திகரித்துக் கொள்ள எந்த விருப்பமும் இல்லாதவர்களுமாயிருக்கிறார்கள். அத்துடன், தேவனுடைய பார்வையிலும், அவருடைய பரிசுத்தத்தின் ஆவியைப் பெற்றிருப்பவர்களுடைய பார்வையிலும் அது எவ்வளவு அசுசியாயிருக்கிறது என்பது பற்றி எந்த நியாயமான மதிப்புணர்வும் அவர்களிடம் இல்லை.

கோபம், வெறுப்பு, பொறாமை மற்றும் பல்வேறு வகையான இச்சைகள் (சுயநலமான விருப்பங்கள்) போன்றவைகள் உலகத்தாரின் வழக்கமான மற்றும் சாதாரணமான நிலைமைகளாக இருக்கின்றன என்று உலகத்தாரின் நிலைமையைக் குறித்து கர்த்தர் விவரிக்கிறார். இச்சையும், சுயநலமும் – வழக்கமாக முழு அளவு மிருகத்தனத்தை உண்டாக்குகிறது. இந்த குணமானது இயற்கையான மனதை சொத்து, சுகம் அல்லது அதிகாரத்தை விரும்பித் தேடுவதில் நிரப்ப நாடுகிறது. ஆகவே அவைகளுக்குப் பதிலாக ஒன்றையும் கொடுக்காமல் அவைகள் எடுக்கப்பட்டுவிட்டால் ஜீவியமானது அதன் கவர்ச்சிகளையெல்லாம் இழந்துவிடும். பதிலாகக் கொடுக்க ஒன்றுமே இல்லாதபோது, அப்படிப்பட்டவர்களை மாம்சத்திலும், ஆவியிலும் உள்ள அசுசிகளைத் தள்ளி விடும்படி புத்திகூறுவதில் நியாயம் எங்கே இருக்கிறது?

விசுவாசிகள் மத்தியில் காணப்படுகிற அதே அளவில் – விசுவாசிகளாயிராதவர்கள் மத்தியிலும் அநேக உயர்ந்த குண சிந்தையுள்ள ஜனங்கள் இருக்கிறார்கள் என்று சிலர் வலியுறுத்துகிறார்கள். நாங்கள் ஆம்! என்று பதிலளிக்கிறோம். வேத வாக்கியங்களும் இதை ஒத்துக் கொள்கின்றன. அழைக்கப்பட்டவர்கள் மத்தியில், இந்த உலகத்தின் போக்குக்கு ஏற்றபடி, அங்கே அநேக சிறந்த அல்லது ஞானமுள்ள அல்லது உயர் குணமுள்ளவர்கள் இல்லை. (1 கொரி. 1:26-29). தங்கள் சீர்கெட்ட நிலைமையையும், இரட்சகர் மற்றும் அவருடைய ஒத்தாசையின் அவசியத்தையும் பற்றி மிகவும் குறைவாகவே ஆழ்ந்து சிந்திக்கிற உயர் குணமுள்ளவர்களைவிட மனித சமுதாயத்தின் அங்கத்தினர்களில் கீழ் நிலையிலுள்ளவர்கள், பெருந்தன்மையற்றவர்கள் மற்றும் அதிகமாக சீர்கேடடைந்தவர்கள் மீதே வழக்கமாக தேவனுடைய கிருபையின் செய்தியானது உறுதியாக பற்றிக் கொள்கிறது. உலகத்தார் மத்தியில் சிலர் உயர் குணமுள்ள சிந்தையுள்ளவர்களாகவும், ஆனால் விசுவாசிகளோ பொதுவாகவே, கீழ்நிலை சமூகத்தரமுள்ளவர்களாகவும் காணப்படுவார்களானால், தேவன் எப்படி அவிசுவாசிகளைக் காட்டிலும் அதிக குறிப்பிடத்தக்க அக்கறையை இவர்களில் கொண்டிருக்கமுடியும்?

இயற்கையாகவே குறைந்த உயர் குணத்தில் குறைவுபட்ட சிலரை பிள்ளைகளாக ஏற்றுக் கொள்வதையும், இயற்கையாகவே அதிகமாக உயர் குணமுள்ளவர்கள் சிலரைப் புறக்கணிப்பதையும் எந்த வகையான சட்டத்தின் மூலம் தேவன் செய்கிறார்?


தெய்வீக ஏற்றுக் கொள்ளுதலின் சட்டம் அல்லது தரம் என்னவெனில் இருதயத்தின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுமாயிருக்கிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். யாரெல்லாம் தங்கள் இருதயங்கள், மனங்கள் மற்றும் சித்தங்களில் பாவத்திலிருந்து மனந்திரும்பி, விசுவாசத்தினாலே தேவனுடைய ஒழுங்கு முறையை ஏற்றுக் கொள்ளுகிறார்களோ அவர்களை மட்டுமே, தேவன் அவர்களுடைய மாம்சம் மற்றும் அதன் குறைபாடுகளுக்கேற்றபடியல்லாமல், அவர்களுடைய சித்தங்கள், அவர்களுடைய நோக்கங்களுக்கேற்றபடியே, அவர்களை ஏற்றுக் கொள்கிறார். மாம்சத்தின்படியான அவர்களுடைய விருப்பமற்ற குறைபாடுகள் அவருடைய பார்வையிலிருந்து பாவத்தை வெறுத்து, அவர்களுடைய மாம்சத்திலும், எல்லா இடங்களிலும் அதற்கு எதிராக நல்ல போராட்டத்தைப் போராட நாடுகிற அவர்களுடைய புதிய மனதின் இயலாமையின் அளவுக்குத்தக்கதாக கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் அவர்களை மூடுகிறது. அப்படிப்பட்ட வகுப்பாரையே, நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் முன்னிலைப்படுத்தி "**பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொள்ளக் கடவோம்**" என்று சொல்கிறார்.




## தேவனுக்குப் பிரியமானவர்கள் மதிக்கப்படுவதில்லை

கர்த்தருடைய வாயாக, அப்போஸ்தலன், பாவத்தை விட்டு விலகி ஓடி வந்து தேவனுக்குப் பிரியமாகவும், உகந்தவர்களாகவும் இருக்கும்படி முயற்சி செய்கிற விசுவாசிகள் எல்லாரையும், "**பிரியமானவர்களே**" என்று அழைக்கிறார். ஒரு நற்குண சிந்தையுள்ள மனிதராக இருந்த அப்போஸ்தலன், இந்த பிரியமான சகோதரர்களில் அநேகர் மாம்சத்தில் பலவீனங்களும், அபூரணங்களும் உள்ளவர்களாயிருந்தனர் என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். அவர் அவர்களை நேசித்தது இந்த குறைபாடுகளின் அடிப்படையில் அல்ல, ஆனால் அப்படியிருந்த போதிலும் – அவர்கள் இருதயத்தில், சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகளுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தனர். பாவத்தையும், சாவுக்கேதுவான தங்களுடைய சரீரங்களிலே அதன் மீதுள்ள விருப்பங்களையும் மற்றும் உலகத்தில் அவைகளின் செல்வாக்கின் போக்கையும் மேற்கொள்ள பெரும் முயற்சிசெய்து கொண்டிருந்தனர்.

ஆனால் பிதா நேசிக்கிற இவர்களை, இயேசு நேசிக்கிற இவர்களை, அப்போஸ்தலன் நேசிக்கிற இவர்களை உலகம் நேசிப்பதில்லை. நமது எஜமானருடைய வார்த்தைகள் "**உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்: நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்,.... நீங்கள் போய்க் கனி கொடுக்கும் படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.**" (யோவா. 15:18,19,16).




உலகம் இந்த தெரிந்து கொள்ளப்பட்டவர்களை விரும்புவதில்லை. ஏனெனில், அவர்கள் தங்கள் சொந்த பலவீனங்களை அறிக்கையிட்டு, அந்த பலவீனங்களுக்கு எதிராக பெரு முயற்சி செய்து, அவைகளின் சரியான பெயர்களைக் கொண்டு – பாவங்கள், இழிவானவைகள், மாம்சம் மற்றும் ஆவியிலுள்ள அசுசிகள் என்று அழைக்கிறார்கள். தங்களைச் சுத்திகரிக்க அவர்களால் மேற்கொள்ளப்படுகிற ஒவ்வொரு முயற்சியும், தங்களை சுத்திகரித்துக் கொள்ள முயற்சி செய்யாதிருக்கிற மற்றவர்களுக்கு ஒரு கடிந்து கொள்ளுதலாயிருக்கிறது. ஏனெனில், அவர்கள் மிகுதியாகப் பிரியமாயிருக்கிற காரியங்களான பேராசை, சுயநலம், கட்டுப்பாடற்ற மனநிலைகள், சண்டை, பெருமை, வீணான மகிமை போன்றவைகள் யாவும் பாவமானவை என்று நினைவு படுத்துவதை வெறுக்கிறார்கள். உலகத்திற்கு முற்றிலும் இசைவாயிருப்பவன் எவனும் நிச்சயமாக தேவனுடைய விருப்பத்திற்கு ஏற்றவனாக இருக்கமாட்டான். தேவனுடைய விருப்பத்திற்கு ஏற்றவனாக இருப்பவன் உலகத்தின் விருப்பத்திற்கு ஏற்றவனாயிருப்பான் என்று எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் உலக சிநேகமும், உலக ஐக்கியமும் தேவனுக்கு விரோதமான

பகையாயிருக்கின்றன. ஆகையால், உலகமானது தேவனுடைய தரத்திற் குரியதாக இல்லை. உண்மையில், "**விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத் துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்**" (யாக். 4:4).

தேவனுடைய பிரமாணத்தின் தேவைகள் – முழுமன தோடும், முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும், தேவனிடத்தில் அன்பு கூருவதாகும். உலகத்துக்கு, அது எல்லா வழியிலும், நியாயமற்றதும், விரும்பப்படத் தகாததுமாயிருக்கிறது; அத்துடன் இந்த தேவைகள் பற்றிய ஒவ்வொரு நினைவூட்டுதலும் வெறுப்பையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்துகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு நம்முடைய கர்த்தரும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களும் எப்போதுமே விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளப்படத் தகாதவர்களாயும் அழைப்பில்லாமல் நுழைகிறவர்களுமாயிருக்கிறார்கள். தவறு செய்கிறார்கள் என்று உணர்த்துகிற எந்த ஆலோசனையையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் தனித்து விடப்பட விரும்புகிறார்கள். உண்மைதான் அவர்களில் சிலர் தயாளகுணத்தில் மகிழ்ச்சியான பெருமையும், நற்பெயரெடுப்பதில் விருப்பமும், நேர்மை மற்றும் ஒழுக்கத்திற்கான நற்கீர்த்தியும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களைத் தரமானவர்கள் மற்றும், முன்மாதிரியாகப் பின்பற்றத் தக்கவர்கள் என்று கருதப்பட விருப்பமுள்ளவர்களாகவும், எந்த தலையீட்டையும், அவர்களுடைய சிந்தனைகள், வார்த்தைகள் அல்லது செயல்களை தெய்வீக தரங்களின்மூலம் எந்த அளவிலும் அளவிடப்படுவதில் கோபமடைகிறார்கள். ஆகையால் தெய்வீக தரங்களை தொடர்ந்தேர்ச்சியாக அங்கீகரித்து கனம் பண்ணுகிறவர்கள் அவர்களால் வெறுக்கப்படுவது அவசியமாகிறது.

## சுத்திகரிப்புக்கான அவசியம்

தேவன் தம்முடைய பார்வையிலிருந்து இந்த கறைகளையெல்லாம் முழுமையாக மூடியிருப்பதாக நாம் கண்டு கொள்ளும் போது, தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய இருதயங்களிலும், தங்களுடைய மாம்சத் திலும் ஒரு சுத்திகரிப்பு வேலையைச் செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் பவுல் ஏன் புத்தி சொல்ல வேண்டும்? கறைகள் யாவும் மூடப்பட்டிருக்கும் போது, அவற்றைக் குறித்து மேலும் ஏன் கவலைப்படவேண்டும்? ஆ, மிகச் சிறந்த காரணங்கள் இருக்கின்றன! தேவன் கிருபையாக அவைகள் எல்லாவற்றையும் மூடியிருக்கிறார். அவர் களுடைய குற்றத்தை அவர்கள் மீது சாட்டுதல் செய்ய வில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிற போதிலும், தேவனுக்கும், அவருடைய நீதிக்கும் இருதயத்தில் உத்தமமாயிருக்கிற, பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய குற்றங்கள், தங்களுடைய பாவங்கள், தங்களுடைய மாம்ச பலவீனங்களால் மிகுந்த மனத்துயரமடைகின்றனர். ஏனென்றால், இருதயத்தில் அவர்கள் தங்களுடைய குற்றங்களை எதிர்க்கின்றனர். சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கு உண்மை-யாயிருப்பதின் மூலமாக குண இலட்சணத்தை கட்டி யெழுப்புவதும், உறுதிப்படுத்துவதுமே இந்த வகுப்பாரின் வாஞ்சையாக இருக்கிறது. அவர்களுடைய மனங்கள் கர்த்தருக்கு உண்மையாயிருப்பதிலும், அவருடைய அன்பின் தங்கப் பிரமாணத்திலும் அதிகமதிகமாக உறுதிப்படுத்தப் படவேண்டும் என்றும் விரும்புகின்றனர். மேலும் அதனால் கூடிய மட்டும் புதிய மனமானது, விழுந்து போன அபூரணமான மாம்சத்தைக் கட்டுப்படுத்தி, தேவனுடைய அன்பின் பிரமாணத்துக்கு இசைவாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும்.

நாம் தேவனுடைய வசனத்தின் மூலம் தீமை யிலிருந்து சுத்திகரிக்கப்படுவதைப் பற்றிப் பார்ப்போம். இது தீமையை மேற்கொள்ள மிகவும் முக்கியமான வழிமுறை களில் ஒன்றாக இருக்கிறது. சரியாகக் கவனித்தால் இதுவே எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது. மெய்யாகவே, ஒவ்வொரு நோக்கு நிலையிலிருந்தும் இது ஒன்று மட்டுமே தீமையை அருவருக்கவும், ஒதுக்கித்தள்ளவும், எதிர்க்கவும் பயன்படுத்தப்படமுடியும். ஆகவே இதன் பயன்பாடு, எல்லாவற்றுக்கும் (பொருந்தக்கூடியது) பொதுவானது. தேவனுடைய வசனத்தினால் தீமையிலிருந்து சுத்தி கரிக்கப்படுவது என்ற இந்த உருவகமான வாக்கியத்தை, சொல்லர்த்தமான மொழிநடையில் சொல்வதாக இருந்தால், நம்முடைய குற்றங்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும்படி அந்த குற்றங்கள் அழிக்கப்படும் வரைக்கும், வசனத்தின் பொருத்தமான பகுதிகளைப் பயன்படுத்து கிறோம் என்று நாம் அர்த்தங்கொள்ளலாம்.

இந்த வழிமுறையை சில உதாரணங்களிலிருந்து உடனடியாக நாம் புரிந்து கொள்ள முடியும். அடிக்கடி நம்முடைய கைகளை அழுக்காக்கிக் கொள்ளும் போதெல்லாம், அவற்றை சுத்தம் செய்ய, தண்ணீரைப் பயன்படுத்துகிறோம். எனவே, வேதாகமத்தின் அடையாளங் களில், தேவனுடைய வார்த்தை அநேக இடங்களில் தண்ணீருக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. "**அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன், நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும், உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். வானங்களே, செவிகொடுங்கள், நான் பேசுவேன்: பூமியே, என் வாய்மொழி களைக் கேட்பாயாக. மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்: பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம்இறங்கும்.**" (எசே. 36:25;உபா. 32:1,2). இந்த வசனங்களை மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள அசுசிகளை நீக்கப் பயன்படுத்தும்போது, அப்படிப்பட்ட கறைகளிலிருந்து நம்மைச் சுத்திகரிக்கிறது. மீண்டும், நாம் அநேகந்தரம் நம்முடைய வஸ்திரங்களையும் கறைபடுத்திக் கொள்கிறோம்; அவற்றை சுத்தம்செய்ய தண்ணீரைப் பயன்படுத்துகிறோம்; அதைப் போலவே நம்முடைய இருதயம் மற்றும் மனதின் குணங்கள் சில சமயங்களில் வஸ்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன. "**ராஜகுமாரத்தி உள்ளாக பூரண மகிமையுள்ளவள்: அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது, சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டு**

**வரப்படுவாள்: அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்.**'' (சங். 45:13,14). இந்த குணங்களில் தவறு ஏற்படும் போது, நம்முடைய வஸ்திரங்கள் கறைபட்டுவிட்டது அல்லது அழுக்கடைந்து விட்டது என்று நாம் சொல்கிறோம். எல்லா அழுக்கையும்,அவற்றிலிருந்து அது நீக்கும் வரைக்கும் அவற்றை தேவனுடைய வார்த்தையாகிய தண்ணீருக்குள் போடும்படி நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. அதைப்போலவே தேவனுடைய வார்த்தையின்மூலம் தீமையிலிருந்து நம்மை சுத்திகரிப்பது என்பதன் அர்த்தம், தேவனுடைய வார்த்தையின் வல்லமையின் மூலமாக அவை முழுவதுமாக நீக்கப்படும் வரைக்கும், அவருடைய வார்த்தையின் பொருத்தமான பாகங்களை நாம் எடுத்து, நம்முடைய குற்றங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதாகும்.

இந்த வழிமுறை எண்ணற்ற வேதபகுதிகள் நிரூபிக் கிறபடி நிச்சயமாகவே, வேதாகமத்தின் அடிப்படையிலானது ஆகும். அநேக வேத பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் வசனத்தை கவனிக்கவும்! சங். 119:9; ''**வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே.**'' ''வழியில்'' உள்ள கறைகள் என்பது சுத்திகரிக்கப்பட வேண்டிய மோசமான குணங்களை இங்கு குறிப்பிடப்படுவது தெளிவாயிருக்கிறது. சங்கீதக்காரன், எப்படி ஒருவன் தன் வழியைச் சுத்தம் பண்ணுவான் என்று கேட்டு, அதற்கு தேவனுடைய வசனத்தின்படி தன் வழியைக் காத்துக் கொள்வதன் மூலமாக, அதாவது தன்னை வசனத்தின் மூலமாக ஜாக்கிரதையுடன் காத்துக் கொள்வதன் மூலமாக, அவன் தன்னுடைய வழியிலிருக்கிற தீமைகளிலிருந்து தன்னை சுத்திகரித்துக் கொள்வான் என்று பதிலளிக்கிறார். இதே கருத்திற்கு இசைவான கூற்றை இயேசு யோவா. 15:3-ல் கொடுக்கிறார், ''**நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.**'' இந்த வசனத்தின்படி தேவனுடைய வசனம் தேவனுடைய ஜனங்களை சுத்திகரிக்கிறது. 1 கொரி. 6:11-ல் ''**கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்**'' என்று கூறப்பட்டுள்ளது. இங்கே கறை களிலிருந்து ஓர் சுத்திகரிப்பானது, நம்மில் நடைபெறுகிறது என நமக்குக் காட்டப்படுகிறது. தேவனுடைய ஆவி அவருடைய செயற்கருவியாக செயல்பட்டு, இந்த மகிமை யான பலனை நிறைவேற்ற அவருடைய வார்த்தையைப் பயன்படுத்துகிறது.

இந்த வழி முறையின் காரியம் ஏற்கெனவே சொல்லப் பட்டபடி, அதின் நடைமுறைப் பயன்பாட்டில் அது எல்லாவற்றுக்கும் பொருந்துவதாயிருக்கிறது. இது ஒவ்வொரு வழியிலும் வெளியேயும், உள்ளேயும் தீமையை வெறுக்கவும், தவிர்க்கவும், எதிர்க்கவும் நமக்கு உதவி செய்யும். ஆயினும், இந்த ஆய்வுக் கட்டுரையில் நாங்கள் வற்புறுத்த விரும்பும் முக்கியமான பயன்பாடு, நம்மை தீமையை வெறுக்கக் கூடியவர்களாக்கும் பயன்பாடாகும். அதன்படி நம்முடைய தவறுகளுக்கு வேதவாக்கியங்களின் தகுந்த பாகங்களைப் பயன்படுத்துவதன் மூலமாக, நாம் அவற்றை வெறுக்கக் கூடியவர்களாக ஆக முடியும். அத்துடன் அப்படிப்பட்ட வெறுக்கத்தக்க காரியத்திலிருந்து, நாம் நம்மை முழுமையாக விடுவித்துக் கொள்ள முடியும் என்று நாங்கள் காட்ட விரும்புகிறோம். இந்த வழிமுறையின் முக்கியத்துவத்தை மிகவும் அதிகமாக வலியுறுத்த முடியாது. தீமையை மேற்கொள்வதற்கான முக்கியமான வழிமுறை களில் இதுவே மேன்மையான வழிமுறையாயிருக்கிறது. இது தீமைக்கு எதிரான நம்முடைய போராட்டத்தில் நம்முடைய எல்லா வல்லமைக்கும் ஆதாரமாகிய தேவனு-டைய வார்த்தையுடன் நம்மை இணைக்கிறது. எனவே தீமையை மேற்கொள்வதற்கு முக்கியமான வழிமுறைகளின் மத்தியிலும் இதன் முக்கியத்துவத்தை நாம் உடனடியாக காண முடிகிறது.

முதலாவது புதிய மனம், இருதயம் மற்றும் சித்தம், ஒரு தவறையும் அதை அனுபவத்திற்கு (செயல்பாட்டிற்கு) கொண்டுவர காரணமாயிருந்த சில சூழ்நிலைகளையும் நன்கு கவனித்து அந்த தவறிலிருந்து சுத்திகரிக்கப் பயன்படும் தேவனுடைய வார்த்தையின் அத்தகைய பகுதிகளை உறுதியாகப் பற்றிக் கொள்கின்றன. அதன் பின்பு, தேவனுடைய வார்த்தையின் வல்லமை, அந்த தவறிலிருந்து நம்மை விடுவிக்கும் வரைக்கும் புதியசித்தம் அவற்றை மனதிலும், இருதயத்திலும் பற்றிக் கொள்கிறது. தீமையைப் பற்றிய வெறுப்பை வளர்த்துக் கொள்வதற்கு இந்த முறையை தீமையிலிருந்து நம்மை சுத்திகரிக்கிற வழி முறையாக பயன்படுத்த விரும்புவதால், தேவனுடைய வார்த்தையின் அப்படிப்பட்ட பகுதிகளை நாம் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அது தீமையை மனப்பூர்வமாக வெறுப்பதை நம்மில் வளர்ப்பதுடன், அந்த வெறுப்பைப் பயன்படுத்தி வார்த்தையின் வல்லமையின் கீழ் இந்த தப்பிதங்களை வெளியேற்றுகிறது. தீமையின் மீதான நமது அருவருப்பு இயல்பாகவே அதிலிருந்து நம்மைத் திரும்ப வைக்கிறது. நாம் எதையும் வெறுக்கக் கற்றுக்கொள்வோ மானால் நாம் அதற்கு எதிராக கிளர்ச்சி செய்வோம்; அதன்பிறகு அதனுடன் செய்வதற்கு ஒன்றும் இருக்காது.




**இருதயத்தின் நிறைவினால்**
**வாய் பேசும்**

நம்முடைய வார்த்தைகள் அனைத்தும், நம்முடைய இருதயங்களின் அளவுகாட்டியாக தேவனால் எடுத்துக்

கொள்ளப்படுகின்றன. நம்முடைய வார்த்தைகள் கலகமுள்ளதாக அல்லது விசுவாசமற்றதாக அல்லது அற்பமானதாக அல்லது மரியாதையற்றதாக அல்லது இரக்க மற்றதாக, நன்றியற்றதாக, பரிசுத்தமற்றதாக அல்லது அசுத்தமானதாக இருந்தால் - ''**இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்**'' (மத். 12:34) என்ற நியதிப்படி நமது இருதயம் தீர்மானிக்கப்படுகிறது. நம்முடைய அன்றாட ஜீவியத்தின் வெவ்வேறான சூழ்நிலைகளில் எல்லாம் நம்முடைய வார்த்தைகள் நம்முடைய இருதயங்களின் நிலைமையை தேவனுக்கு முன்பாக தொடர்ந்து சாட்சி கொடுப்பதாக இருக்கிறது. ஆகவே நமது தேவனுடைய வார்த்தைகள் குறிப்பிடுகிறபடி காரியத்தைப் பற்றிய இந்த கோணத்தில் இது காலத்திற்கு பொருத்தமான புத்திமதியாயிருக்கிறது. ''**தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்க மாயிருப்பதாக.**'' (பிர, 5:2). அத்துடன் ''**சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங் கமுமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்**'' (எபி. 4:13) என்பதை நினைவில் கொள் வோமாக. தேவனுக்கு முன்பாக ஏறெடுக்கப்படும் நம்முடைய வார்த்தைகள் கருத்துள்ளதாகவும், ஞானமுள்ளதாகவும் இருக்க வேண்டுமேயல்லாமல், முன்யோசனையற்றதும், பதற்றமுள்ளதும், தீமையாக சிந்திக்கப்பட்டதாகவும் இருக்கக் கூடாது. மீண்டும் நம்முடைய வார்த்தைகளினால் ஏற்படுகிற பொறுப்பு பற்றிய கர்த்தருடைய வாக்கியத்துக்கு இசைவாக,''**தன் வாயைக் காக்கிறவன், தன் பிராணனைக் காக்கிறான்: தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்**'' (நீதி. 13:3) என்றும்கூட எழுதப் பட்டிருக்கிறது.

அதாவது அபூரணமான ஜீவிகளான நாம் வார்த்தையிலும், செயலிலும், எப்போதும் பூரணமாயிருப்பது கூடாத காரியம்; இருந்த போதிலும், நம்முடைய சிறந்த முயற்சிகளையும் மீறி நாம் சில சமயங்களில் வார்த்தையிலும், அதைப்போலவே செயலிலும் தவறி விடுவோம். ஆயினும் நம்முடைய வார்த்தைகள் மற்றும் வழிகளில் பூரண திறமையடையும் காரியத்தை ஜாக்கிரதையும், உண்மையுமுள்ள முயற்சியின் மூலமாகத் தேட வேண்டும். ஆனாலும் அப்படியிருந்தாலுங்கூட, ஒவ்வொரு வீணான (மத். 12:36) வார்த்தைக்கும், நாம் நமக்குரிய இந்த நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கொப்புவிக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையின்படி, நம்முடைய வழிகளை நாம் அன்றாடம் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும் போது, எந்த குறிப்பிட்ட காரியத்திலாவது நம்முடைய வார்த்தைகள் தேவனுக்கு அவமானம் உண்டாக்குவதாக நாம் கண்டு கொண்டால் - ''**ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**'' (1யோவா. 2:1) என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நமக்காகப் பரிந்து பேசுகிறவர் நாமத்தில் நாம் கிருபாசனத்தை கிட்டிச் சேர்ந்து நம்முடைய பரம பிதாவிடம் நாம் நம்முடைய தவறை உணர்ந்து கொண்டதையும், அவருடைய நாமத்தையும், அவருடைய காரியத்தையும், பரிசுத்தமான நடத்தை மற்றும் சம்பாஷனை மூலமாக கனப்படுத்த நாம் தவறியதற்காக மிகவும் மனம் வருந்துவதையும் விவரித்து, நமக்கெதிராக அந்த பாவம் சுமத்தப்படாமல், ஆனால் கிறிஸ்துவின் மூலமாக நாம் கழுவப்படவும் அவருடைய கிருபையான ஏற்பாட்டினால் அது நிவிர்த்தி செய்யப்படவும், தாழ்மையுடன் விண்ணப்பம் செய்ய வேண்டும். அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தில் தான் நம்முடைய எல்லா நம்பிக்கையும், தஞ்சமும் இருக்கிறபடியால் அதைத் தாழ்மையுடன் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். யாக். 3:2-ம் வசனம், ''**நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்: ஒருவன் சொல் தவறாதவனானால், அவன் பூரணபுருஷனும், தன் சரீரம் முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்**'' (டயக்லாட்) என்று கூறுகிறது. ஆனால் அப்படிப்பட்ட மனுஷன் இல்லை. நாமெல்லாரும் நம்முடைய மீட்பரும், பரிந்து பேசுகிறவரின் புண்ணியத்திற்காக தொடர்ந்து கெஞ்சிக் கேட்க வேண்டும். அதே சமயத்தில் எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவின் சித்தத்துக்கு கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாகவும், நம்முடைய பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே (பயபக்தியோடு) பூரணப்படுத்துவதற்கு அனுதினமும் முயற்சி செய்ய வேண்டும்.

## "நம்மைநாமே சுத்திகரித்துக் கொள்வோமாக"

நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில், ''நம்மை சுத்திகரித்துக் கொள்வோமாக'' என்கிற வார்த்தைகள் ஆதாமின் சாபத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆதி பாவத்திலிருந்து அப்படிப்பட்ட சுத்திகரிப்பு நம்முடைய பங்கில் கூடாத காரியமாயிருக்கிறது. நாம் தேவனிடமிருந்து இலவசமான ஈவாக அதைப் பெறாத வரையில் அதனை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. பின்பு எந்த வகையில், நாம் நம்மை சுத்திகரித்துக் கொள்ள முடியும்? ஆதாமின் சாபத்திலிருந்து கர்த்தரால் முதலில் சுத்திகரிக்கப்பட்டவர்களாக எண்ணப் பட்டு, அவருடைய பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ், அவருடைய வசனத்தைப் புரிந்து கொள்கிற பிரகாசிப்பித் தலுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு, நீதிக்கான நம்முடைய வைராக்கியத்தைக் காண்பிக்கவும், இந்த வேலையில் அவருடன் ஒத்துழைக்கவும் அழைக்கப்படுகிறோம் என்று பதிலளிக்கிறோம்.

ஆதாமின் ஆக்கினைத் தீர்ப்பு முழுவதும் நம்மை விட்டு கடந்து போய் விட்டதாக எண்ணப்படும் போது, நாம் தேவனுக்கு நம்முடைய ஆவியையும், நம்முடைய நோக்கத்தையும் நம்முடைய மனங்களிலும், நம்முடைய மாம்சத்திலும் பாவத்திற்கு எதிராக முயற்சி செய்வதின் மூலமாக எடுத்துக் காட்டுகிற சந்தர்ப்பத்தை இப்போதும் பெற்றிருக்கிறோம். இந்த வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் செய்யப்படும் சுத்திகரிப்பிற்கு தூண்டு விசையாக இருப்பது தேவன். ஆனால் சுத்திகரிப்பு என்பது - நம்மில் நாம் செய்ய வேண்டிய காரியமாயிருக்கிறது. "நம்மை நாமே

சுத்திகரித்துக் கொள்வோமாக." இந்த சுத்திகரிக்கும் வேலையானது மனச்சோர்வுண்டாக்கும் ஒன்றாகும். ஏனெனில் முதலாவது நாம் எவ்வளவு அதிகமாக கறை பட்டவர்களாயிருந்தோம், இயல்பான மனதின் ஆலோசனைகள் யாவும் கிட்டத்தட்ட எவ்வளவு சுயநலமுள்ளதாயிருந்தது என்றும் நாம் பகுத்தறியாதவர்களாயிருந்தோம். சுயநலம்தான் பாவம் என்றுகூட நாம் புரிந்து கொள்ளாதிருந்தோம்.




நம்முடைய அறிவின் கண்கள் அதிகமதிகமாக அகலமாக திறக்கப்படுவதால் நம்முடைய ஆண்டவரையும், அவருடைய நீதியையும், நம்முடைய சொந்த அபூரணமான நிலைமையையும், அவருடைய மூடும் வஸ்திரத்தின் அவசியம் போன்றவைகளையும் பற்றிய சரியான புரிந்து கொள்ளுதலை நாம் பெற்றுக்கொண்டோம். அப்பொழுதிலிருந்து, நாள் தோறும் பாவம், தப்பறை, தன்னலம் மற்றும் உலகத்தனத்தையும் – ஆம், துன்மார்க்கத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட நாம் முழுபலத்தோடும் முயற்சி செய்கிறவர்களாயிருக்கிறோம். – முதலாவது வெறும் மேம்போக்கானது என்று மட்டும் எண்ணியிருந்த நம்முடைய கறை எவ்வளவு ஆழமாயிருந்தது என்று அறியும் போது நாம் மிகுந்த மனவேதனையுள்ளவர்களாகிறோம்.

தேவனுடைய ஜனங்களில் அநேகர் மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள அசுசிகளிலிருந்து தங்களை சுத்திகரிக்க முயற்சிப்பதில் பலவருட உழைப்பிற்கு பின்பும் இந்த சுயநலம் போன்ற அசுசிகள் பெரும்பாலானவற்றிலிருந்து அவர்களை விடுவித்துக் கொண்ட போதிலும் கூட, அவர்கள் முதலாவது பகுத்தறிந்ததைக் காட்டிலும் அதிகமாக, தங்களுடைய சொந்த கறைகளைக் காண்கின்றனர். தேவன் நம்மை மாம்சத்தின்படியல்ல, ஆனால் நம்முடைய நோக்கங்கள், நம்முடைய வாஞ்சைகள் மற்றும் நம்முடைய முயற்சிகளைப் பொறுத்தே நம்மை கவனிக்கிறார் என்ற தேவனுடைய வார்த்தையின் நிச்சயம் இல்லாவிட்டால், இது சுத்திகரிப்பு வேலையில் மிகவும் நம்பிக்கையிழக்கச் செய்துவிடும். நம்முடைய வெற்றியின் அளவு எதுவாக இருந்தாலும், நம்முடைய இயல்பான கறைதிரைகளுக்கு எதிராக நம்முடைய நல்ல போராட்டத்தின் காரணமாக அவர் நம்மை ஜெயம் பெற்றவர்களாக எண்ணுகிறார்.

நாம் கர்த்தரை ஏற்றுக் கொண்டபிறகு, அவரை நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகவும் நாம் அவருடைய சிலுவை வீரர்களாகவும் அவருடன் சேர்ந்து பாவம், மாம்சம் மற்றும் பிசாசின் எல்லா கிரியைகளுக்கும் எதிராக நல்ல போராட்டத்தைப் போராடுகிற நிலையை உறுதியாக ஏற்றுக் கொள்கிறோம். தீமையான பழக்கவழக்கங்களையும், வெளிப்புறமான ஒவ்வொரு வகை பொல்லாங்கையும், ஒதுக்கித் தள்ளி மாம்ச சுத்திகரிப்பை மிகச் சரியாகத் தொடங்குகிறோம்.

நீண்ட காலத்துக்கு முன்பு, அநேகருடைய காரியத்தில் வெளிப்புறத்தில் குறிப்பிட்ட அளவிலான மாற்றம் வெளிப்பட்டது – கவனமற்ற பேச்சு முறை தவிர்க்கப்பட்டது; அடங்காத உணர்ச்சிகள் அடக்கப்பட்டது. சுயநலத்துக்கு குறைந்தபட்சமாக வெளித்தோற்றமாகத் தெரிகிற அதின் காரியத்திற்கு கடிவாளமிடப்பட்டது. அயலகத்தார்களும், நண்பர்களும் குறிப்பிட்ட மாற்றத்தைக் காண முடிந்தது. இது நல்லது தான், ஆனால் போதுமானதல்ல. நாம் நம்முடைய ஆவிகளையும், நம்முடைய மனங்களையும் கூட நிச்சயமாக சுத்திகரிக்க வேண்டும். வெளிப்படையான பொல்லாங்குகளை நாம் தவிர்ப்பது மட்டும் போதுமானதல்ல. நம்முடைய மனங்களும்கூட சுத்திகரிக்கப்படவேண்டும். நாம் பாவத்தை வெறுக்கவும், ஆரம்பத்திலேயே அது நெருங்கிவராதபடி விரட்டியடிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய மனங்களும், நம்முடைய சரீரங்களும் தேவனுடைய ஆலயங்களாயிருப்பதையும், அவருக்கும், அவருடைய நீதி மற்றும் அன்பின் பிரமாணத்திற்கு எதிரான எல்லா காரியங்களும் தடை செய்யப்பட வேண்டும் என்பதையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் வெளிப்புற வகையான வெற்றிகளைப் பற்றி சாட்சி கூறும் போது, பிரதிஷ்டை செய்தவர்களின் மிக முக்கியமான யுத்தங்களானது, நமக்கும், நம்முடைய அதிபதியானவருக்கும் மட்டுமே தெரிந்தவைகளாயிருக்கின்றன – அவைகள் பழையதும் இயல்பானதுமான பண்புகளின் செல்வாக்குகளுக்கு எதிரான புதிய சித்தத்தின் யுத்தங்களாகும். உண்மையான சிலுவை வீரன், அவனுடைய போர்க்குணத்தைக் காட்டுவதற்கும், அதில் தன்னை நன்கு ஈடுபடுத்திக் கொள்வதற்கும், இந்த யுத்தகளம் முற்றிலும் போதுமானதாக இருப்பதைக் கண்டு கொள்வான். இந்த வழிமுறையில் அவர்கள் முன்னேறிச் செல்லும்பொழுது, அவர்கள் மற்றவர்களிடமும், தம்மைப் போன்ற அல்லது மற்ற பலவீனங்கள் மற்றும் தெய்வீக தரங்களுக்கு எதிரான நாட்டமுள்ளவர்கள் மீதும் அதிக அனுதாபம் கொள்கின்றனர். முக்கியமாக அவர்கள் தங்களைப் போலவே தங்களுடைய எல்லாவற்றையும் தேவனுக்குக் கொடுத்து விட்டு, உலகம், மாம்சம் மற்றும் பிசாசுக்கு எதிராக தங்கள் சரீரங்களிலும், தங்கள் ஆவிகளிலும் யுத்தஞ்செய்கின்ற, பிரதிஷ்டை செய்துள்ள தங்கள் சகோதரர்களுடன் அவர்கள் ஒத்துணர்வுள்ளவர்களாயிருப்பார்கள்.

இயற்கையாகவே, நாம் பாவத்தை விரும்புகிற மனநிலை உடையவர்களாயிருக்கிறோம். கூடுதலாக, பாவமான காரியங்களை அவர்கள் விட்டு விடுகிறதாக இருக்கிற போதிலும் கூட, பாவமான காரியங்களையும், பாவத்தின் அசுத்தங்களையும் மீண்டும், மீண்டும், நினைத்துப் பார்க்கும் மனங்கள் நம்மிடம் இருக்கின்றன. எனவே பாவமான காரியத்திலிருந்து நம்மைத் தூரமாக விலக்கிக் கொள்ளும் போது, நம்முடைய மனங்களையும் கூட தூய்மையாக வைத்துக் கொள்ள நாம் முயற்சி செய்ய

வேண்டியவர்களாயிருக்கிறோம். பாவத்துக்கு சாதகமாக உள்ள எல்லாவற்றையும் நாம் புறம்பே தள்ள வேண்டும். அந்த காரியங்களைக் குறித்து நாம் சிந்திக்கக் கூடாது. பாவமான காரியங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு நம்மை அனுமதிக்கக்கூடாது. "**கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்**" (பிலி. 4:8). நாம் மேலான காரியங்களையே நாடவேண்டும். "**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**"(கொலோ. 3:2).



"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்." கொலோ. 3:2

நம்மை நாமே சுத்திகரித்துக் கொள்வதற்கு, தேவனுடைய சுத்திகரிப்பு உதவியாக இருக்கிறது. ஆம், நம்மில் என்ன அசுத்தம் இருக்கிறது என்று கண்டறிய கவனமாக ஆராய்ந்து, நம்முடைய நடத்தையிலிருந்து அவற்றையெல்லாம் அகற்றுகிறோம் – அதற்கும் மேலாக, நம்முடைய மனங்களிலிருந்தும் அதனை நீக்குகிறோம். நாம் இதனைச் செய்யும்போது, ஜீவியத்தின் எல்லா பாதைகளினூடாகவும் பரிசுத்தம் பரவுகிறது. அதனால் கிறிஸ்தவன் மிகவும் அழகான குணாதிசயத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். எந்த கிறிஸ்தவனும் அழகான குணாதிசயத்தைப் பெற்றிராவிட்டால், அவன் சுத்திகரிப்பு செய்யும் காரியத்தை அனுதினமும் சரியாக கவனிப்பதில்லை என்பதையும், வெளிப்புறத்தில் மனுக்குலத்தாரிடம் கொண்டிருக்கும் தொடர்பிலும், உள்மனதில் தேவனிடமுள்ள அவனுடைய ஐக்கியத்திலும், அவன் சுத்திகரிப்படைவதற்கு சரியான கவனஞ்செலுத்தவில்லை என்பதையும் இது காட்டுகிறது.

நாம் இதையெல்லாம் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடே (பயபக்தி) செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். பயபக்தி என்னும் பயத்துக்கும், அடிமைத்தனமான பயத்திற்கும் இடையே வித்தியாசமிருக்கிறது. பயபக்திக்குரிய பயமானது நன்மை விளைவிக்கிற பயமாகும். நாம் நம்முடைய பரம பிதாவை, அவர் ஒரு பிசாசாக நமக்கெதிராக திரும்பி நம்மைக் கொடுமைப் படுத்துவார் என்று நினைத்து பயப்படக் கூடாது. ஆனால், நாம் அவருக்கு பிரியமில்லாததை செய்து விடுவோமோ என்கிற பயமும், அத்துடன் அவருடைய பார்வைக்குப் பிரியமானதும், அவர் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான காரியங்களைச் செய்வதில் மனமகிழ்ச்சியாய் இருப்பது மான தேவ பயத்தை உடையவர்களாயிருக்க வேண்டும். எனவே நம்மைச் சுத்திகரிக்கிற இவையெல்லாம், பரிசுத்தமாக்குதலை நம்மில் பூரணப்படுத்துகிற இவை எல்லாம், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் நாம் பூரணப்பட்டவர்களாயிருக்கும் படியான நோக்கில் இருக்கிறது. அவருடைய பரிசுத்த ஆவியை நம்மீது பொழிந்தருளி, இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார். நம்முடைய தாலந்துகளை கைக் குட்டைக்குள்ளாக வைத்துக் கொண்டு, எந்த முன்னேற்றமும் அடையாமல் இருப்பதை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சிலர் முப்பது மடங்காகவும், சிலர் அறுபது மடங்காகவும் சிலர் நூறுமடங்காகவும் கனி (பலன்) கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறார். மேலும் நாம் இப்படி செய்யும்போது, நாம் அதற்குத் தகுந்த அளவில் வெகுமதியளிக்கப்படுவோம்.

சங். 19:12-ம் வசனம், தேவன் இந்த சுத்திகரிப்பு வேலையைச் செய்வதாகக் கூறுகிறது. "**மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.**" தீர்க்கதரிசியாகிய தாவீதின் இந்த வார்த்தைகள், தேவனுடைய உண்மையான பிள்ளைகள் அனைவருடைய உணர்ச்சி பூர்வமான கருத்தாக இருக்கின்றன. இந்த வார்த்தைகள் மூலமாக, தீர்க்கதரிசி, தம்மைத்தாமே சுத்தமாக்கிக் கொள்ள முடியாதவராயிருக்கிறார் என்கிற உண்மையை ஏற்றுக் கொண்டதாக காட்டுகிறார். அவர் தாமே உணர்ந்து கொள்ள முடியாத மறைவான குற்றங்கள், அதாவது அவர் தன்னில் இருக்கிற, தன்னால் காணமுடியாத குற்றங்களை அவர் அறிந்துணர்ந்து கொண்டார். ஒருவேளை மற்றவர்கள் அவரிடத்தில் கண்ட சில குற்றங்களை அவர் காணவில்லை. இவைகளிலிருந்து தேவன் அவரை சுத்திகரிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். தேவனுடன் இசைவில்லாத ஒவ்வொன்றிலுமிருந்தும் வெளியேற அவர் விரும்பியதை இது சுட்டிக் காட்டுகிறது. "**என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக.**" (சங். 19:14).

இதுவே, கிறிஸ்தவர்கள் எல்லாருக்குமுரிய சரியான மன உணர்வாக இருக்கிறது. நம்முடைய ஜீவியங்களில் எவைகளெல்லாம் தேவனுக்கு முற்றிலும் பிரியமற்றவைகளாகவும், அவரால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகவும் உள்ளதோ, அவற்றையெல்லாம் நமக்கு காட்டும்படி அவரிடம் நாம் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது அவர் மற்றவர்கள் நம்மைப் பார்ப்பது போல நாமும் நம்மைப் பார்க்க உதவி செய்வார். முக்கியமாக அவர் நம்மைப் பார்ப்பது போல, நாமும் நம்மைப் பார்ப்பதற்கு உதவி செய்வார். தேவனுடைய ஜனங்களில் அநேகர் தங்கள் அபூரணங்களையும், பலவீனங்களையும் (தேவனுடைய பரிபாலனத்தில்) மிகக் கடுமையான அசைத்தல்கள் மூலமாக காட்டி வருவதாக நாங்கள் நம்புகிறோம். சங்கீதக்காரன் செய்தது போல நாமும் துணிகரமான பாவங்களிலிருந்து நம்மை விலக்கி காத்துக் கொள்ளவும், அவைகளிலிருந்து முழுமையாக நம்மைச் சுத்திகரிக்கவும் நாம் தேவனிடம் கேட்க வேண்டும்.


நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம் (2 கொரி. 7:1), மாம்சத்திலும், ஆவியிலும், சரீரம் மற்றும் மனதிலும் செய்யப்படும் இப்படிப்பட்ட சுத்திகரிப்பானது, ஓர் பரிசுத்த பூரணத்தை உண்டாக்குவதை அறிவிக்கிறது. பரிசுத்தம் என்பது ஒரு நொடியில் அடைந்து கொள்ளக்கூடியதல்ல என்பதே இங்கு சொல்லப்படும் கருத்தாகும். ஆனால் இது படிப்படியாக, செயல்படுத்தப்பட்டு, பூரணப்படுத்தப்பட வேண்டும். இந்த காரியத்தைப் பற்றிய சரியான நோக்குநிலை சில ஆபத்தான தப்பறைகளில் விழுந்துவிடுவதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளும். பரிசுத்தம் என்பது நாம் நம்முடைய, சட்டைப்பைக்குள் போட்டு வைத்துக் கொள்ளக்கூடிய தாயத்து அல்ல; இது எப்போதாவது அணிந்து கொள்ளக்கூடிய ஆடையுமல்ல; பரிசுத்தம் என்பது உலோகத் துண்டை வெப்பத்தினால் நீண்ட ஆற்றலுள்ளதாக உறுதிப்படுத்துவதற்கு அதிகமாக ஒத்திருக்கிறது; இது அதின் முழு அமைப்புக்குள்ளாகவும் ஊடுருவி அதனுடைய பொதுவான பண்புகளையே மாற்றிவிடுகிறது. அதனுடைய செல்வாக்கு மறுரூபப் படுத்துகிறதாய் இருக்கிறது. உண்மைதான், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் தான் தேவனுடைய ஜனங்களுக்கு பரிசுத்தமாக எண்ணப்படுகிறது. நாம் முதலாவதாக பாவத்திலிருந்து மனந்திரும்பி, மீட்பரை ஏற்றுக் கொண்டு, தேவனுக்கு நம்மைப் பிரதிஷ்டை செய்யும் போது அது நமக்கு அருளப்படுகிறது. ஆனால் இது போதுமானதல்ல. நாம் விரும்பியதை அடையும்படி, நம்முடைய குணாம் சங்களுக்குள்ளாக முயற்சி செய்ய வேண்டும்; அல்லது அப்போஸ்தலன் சொல்கிறது போல, தேவன் தம்முடைய பரிசுத்தமான சித்தத்தை நமக்குள் கிரியை செய்ய நாம் அவரை அனுமதிக்க வேண்டும். சந்தர்ப்பமும், சூழ்நிலைகளும் அனுமதிப்பது போல பரிசுத்தமான நடத்தையானது பரிசுத்தமான சித்தத்துடன் கூடவருவது அவசியமாகிறது, (பிலி. 2:13).

ஆனால் இந்த பரிசுத்தம் எப்படி நமக்குள் பூரணப்படுத்தப்படுகிறது? எவ்வாறு தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும், நம்மில் உண்டாக்குகிறார்? நம்முடைய பாட தலைப்பு வசனம் கேள்வியின் இந்த பாகத்திற்கும் கூட பதிலளிக்கிறது. வாக்குத்தத்தங்களை நமக்குக் கொடுப்பது, தேவனுடைய பங்காக இருக்கிறது என்பதை இது நமக்கு நிச்சயப் படுத்துகிறது; இந்த வாக்குத்தத்தங்கள் யாரெல்லாம் சரியான மனப்பான்மை உள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கமளிப்பதாக இருக்கிறது. தற்கால மற்றும் எதிர்கால ஆசீர்வாதங்களாகிய இந்த தெய்வீக வாக்குத்தத்தங்கள் இல்லாமல் யார் தன்னுடைய பலவீனங்களுக்கு எதிராகப் போராடுவான்? யார் உலகம்,மாம்சம் மற்றும் எதிராளியின் தாக்குதல்களை இவ்வாறு விடாமுயற்சியுடன் எதிர்த்து நிற்பான்? அதற்கும் மேலாக பாவத்திற்கு எதிராக போராடுவதற்கும், நீதியின் பக்கத்தில் இருக்கிற யாவருக்கும் உதவி செய்வதற்கும், ராஜாவுக்கு ஊழியஞ்செய்வதற்கும், அவனை உயிர்ப்பித்து, புதுப்பெலனளிக்க அங்கே பெரிதும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்கள் இல்லாதிருந்தால் யார் தன்னுடைய ஜீவனையும், தன்னுடைய இயல்பான உரிமைகளையும், கர்த்தருக்கும், அவருடைய காரி யத்துக்கும் ஊழியஞ்செய்ய மனப்பூர்வமாய்ப் பலி யிடுவான்? யாருமில்லை என்றில்லாதபடி நிச்சயமாக சிலராவது இருப்பார்கள். ஆகவே நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம், “**இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே.... நம்மைச் சுத்திகரித்துக் கொள்வோமாக**” என்று சொல்கிறது. மெய்யாகவே இந்த வாக்குத்தத்தங்கள் யாவும் பரி. பவுல் மூலம் சுட்டிக் காட்டப்பட்டபடியே, நாம் சுத்திகரிக்கப் படுவதற்கும், நம்முடைய இரட்சிப்புக்கும் தேவ பெலனா யிருக்கிறது. (ரோமர் 1:16).

முதலில் தகுதியானது சோதித்தறியப்படாமல் ஒருவரும், ராஜ்யத்திற்குள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில், நாம் தற்கால ஜீவியத்தில் நம்முடைய பிதாவின் குணாதிசயத்தை அவருடைய வார்த்தையின் மூலமாக, அறிந்து கொள்ளும் சந்தோஷத்தைப் பெற்றிருக்கிறோம். அதைப் புரிந்து கொள்ள நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு நன்மையாக இருக்கும் என்று அவர் காண்கிற காரியங்களைத் தவிர, வேறு எந்த மிகவும் அற்பமான காரியம் கூட அவர்களுக்கு (சம்பவிக்க) நேரிட முடியாது.

“**ஆகையால் பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்.**” இதையே அப்போஸ்தலன் பேதுருவும், “**இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்**” (2 பேது. 1:10,11) என்று கூறுகிறார். ***



**நீங்கள் முகவரி மாறியிருக்கிறீர்களா அல்லது வேறு இடத்துக்கு மாறப் போகிறீர்களா? இன்றே எங்களுக்கு தகவல் தெரிவித்து புதுப்பித்துக் கொள்ளுங்கள்!**

# இரக்கமும் சத்தியமும்

## கிறிஸ்தவ குணாம்சத்தின் முக்கிய கூறுகள்

**Mercy and Truth - Component Elements of a Christian Character**

''**நியாயஞ் செய்து இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?**'' (மீகா. 6:8)

சில காலத்திற்கு முன்பு விற்பனையாளர்களின் ஒரு குழுவினர் சிகாகோவில் நடந்த ஒரு பிராந்திய விற்பனை மாநாட்டிற்கு சென்றிருந்தனர். அவர்கள் வெள்ளிக்கிழமை இரவு உணவிற்கு அதிக நேரம் முன்பதாகவே வீட்டிற்கு வந்து விடுவதாக அவர்களுடைய மனைவிகளிடம் உறுதியளித் திருந்தனர். அப்படி அவர்கள் பயணச்சீட்டு மற்றும் பெட்டியுடன் அவசரமாக திரும்பிக் கொண்டிருந்த போது, விற்பனையாளர்களில் ஒருவன், காட்சிக்கு வைக்கப் பட்டிருந்த ஆப்பிள் மேஜையை கவனக்குறைவினால் இடறி விட்டான். ஆப்பிள்கள் எல்லா பக்கங்களிலும் சிதறி ஓடின. நிற்காமலும், திரும்பிப்பார்க்காமலும் ஓடிச்சென்று, அவர்கள் கிட்டத்தட்ட தவற விட இருந்த விமானத்திற்குள், சரியான நேரத்தில் ஏறிவிட்டார்கள்.

ஆனால் அவர்களெல்லாரிலும் ஒரே ஒருவன்! நின்றான், ஒரு ஆழமான பெருமூச்சு விட்டு, அவனுடைய உணர்வுகளில் தொடப்பட்டவனாக, கவிழ்க்கப்பட்ட ஆப்பிள் கடையின் சொந்தக்காரியான அந்தப் பெண்ணிற்காக திடீரென்று எழுந்த இரக்கத்தை உணர்ந்தான். அவன் தன் நண்பர்களை அவனை விட்டு போகச் சொல்லி, வழியனுப்பி கையசைத்து, அவர்களில் ஒருவனிடம், அவர்கள் போக வேண்டிய இடத்தில் சேர்ந்த பின்பு, தான் பிந்திய விமானத்தில் வருவதற்கான காரணத்தை தன்னுடைய மனைவிக்கு தகவல் சொல்லும்படி கூறினான். பின்பு அவன் ஆப்பிள்கள் தரை முழுவதும் சிதறிக் கிடந்த விமான நிலைய முனையத்திற்குத் திரும்பி வந்தான்.

அதைச் செய்ததற்காக அவன் மகிழ்ச்சியடைந்தான். அந்த 16 வயது பெண் முற்றிலும் கண் தெரியாத வளாயிருந்தாள். அவள் சப்தமில்லாமல் அழுது கொண் டிருந்தாள். ஏமாற்றத்தால் கண்ணீர் அவள் கன்னத்தில் வழிந்தோடிக் கொண்டிருந்தது, அதே நேரத்தில் ஜனக்கூட்டம் அவளைச் சுற்றி சென்று கொண்டிருந்தது. சிதறியோடிய ஆப்பிள்களை உதவியின்றி கைகளால் தடவித் தேடிக் கொண்டிருந்தாள். யாரும் நிற்கவோ, அவளுடைய அவல நிலைக்காக அக்கறை கொள்ளவோ இல்லை. அந்த விற்பனையாளன், அவளோடு கூட தரையில் மண்டியிட்டு, ஆப்பிள்களைப் பொறுக்கியெடுத்து, மீண்டும் மேஜையில் வைத்து, காட்சிக்கு ஒழுங்குபடுத்தி வைக்க அவளுக்கு உதவினான். அவன் அப்படிச் செய்த போது, ஆப்பிள்களில் அநேகம் அடிபட்டு, சிதைந்திருந்ததைக் கவனித்து, அவைகளைப் பிரித்தெடுத்து இன்னொரு கூடையில் வைத்தான்.



அவன் அதைச் செய்து முடித்த பின்பு, தன்னுடைய பணப்பையை எடுத்து. அந்தப் பெண்ணிடம், ''தயவு செய்து இந்த (அமெரிக்க பணம்) $40-டாலரை நாங் கள் ஏற்படுத்திய சேதத் திற்காக ஏற்றுக்கொள்,'' ''இது உனக்குப் போதுமா?'' என்று கேட்டான். அவள் கண்ணீருடன் போதுமென்று தலையசைத்தாள். அவன் தொடர்ந்து, ''நாங்கள் உன்னுடைய நாளை அதிகமாக கெடுக்கவில்லை என்று நான் நம்புகிறேன்'' என்று கூறினான்.

அந்த விற்பனையாளன் அப்பால் நடக்கத் தொடங்கிய போது, குழம்பி நின்ற அந்த கண் தெரியாத பெண், ''ஐயா'' என்று சத்தமிட்டு அவனை அழைத்தாள். அவன் நின்று திரும்பி அந்தக் குருடான கண்களுக்குள் பார்த்தான். அவள் தொடர்ந்து கேட்டாள், ''நீர் இயேசுவா?''

அவன் ஸ்தம்பித்து நின்று ஆச்சர்யப்பட்டான். அவன் மெதுவாக திரும்பிச் சென்று, ''இல்லை, நான் இயேசுவைப் போலல்ல, அவர் நல்லவர், தயவுள்ளவர், அக்கறை யுள்ளவர், அன்பானவர். மேலும் முதலாவது உன்னுடைய காட்சிப்பொருளில் அவர் மோதியிருக்கவே மாட்டார்'' என்று கூறினான்.

அந்தப் பெண் மெதுவாக தலையசைத்து: ''நான் ஏன் கேட்டேனென்றால், இந்த ஆப்பிள்களைப் பொறுக்க உதவும்படி இயேசுவினிடத்தில் நான் ஜெபம் பண்ணினேன். அவர் உங்களை எனக்கு உதவும்படி அனுப்பியுள்ளார்; எனவே நீங்கள் அவரைப் போன்றவர், (அவருடைய சித்தத்தின் படி செய்பவர்களை அவர் மட்டும் அறிந் திருக்கிறார்) அவருடைய அழைப்பைக் கேட்டதற்காக நன்றி ஐயா'' என்று கூறினாள்.

''**உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்.**'' (சக. 2:8). [ஆங்கிலத்தில் அவருடைய கண்ணின் மணி என்பதற்கு apple of His eye என்றிருக் கிறது]. பின்பு மெதுவாக பிந்திய விமானத்தைப் பிடிக்க

அவனுடைய வழியில் சென்றான். அவனுடைய ஆத்துமாவிலோ: நீ இயேசுவா? உன்னை இயேசுவென்று தவறுதலாக ஜனங்கள் எண்ணுகிறார்களா? என்ற கேள்வி கொழுந்து விட்டு எரிகிறதும், எழும்புகிறதுமாய் இருந்தது.

அதுதான் நமது இலக்கு இல்லையா? இயேசுவின் அன்புக்கும், ஜீவனுக்கும் மற்றும் கிருபைக்கும் குருடாயிருக்கிற உலகத்தோடு வாழ்ந்து அவர்களோடு தொடர்பு கொள்ளும் போது, ஜனங்களால் வித்தியாசத்தை கூற முடியாத அளவுக்கு இயேசுவைப் போன்றிருக்க வேண்டியதே நமது இலக்கு. அவரை அறிந்திருக்கிறோம் என்று நாம் உரிமை கோரும் போது, அவரைப் போலவே நாமும் வாழவும், நடக்கவும், செயல்படவும் வேண்டும். அவரை அறிந்திருப்பதென்பது சாதாரணமாக வேதாகம வசனங்களை மேற்கோள் காட்டுவதையும், தேவாலயத்திற்கு செல்வதையும்விட அதிகமானது. அது ஜீவியத்தின் ஒவ்வொரு நாளும் வெளியாகுகின்ற, நமது வாழ்க்கையை உள்ளபடியே தேவனுடைய வார்த்தையின்படி ஜீவிப்பதாகும்.

"**ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற் புழுங்களுக்கு சமானம்**" (நீதி. 25:11).

வீழ்ச்சியினால் நீங்கள் நசுக்கப்பட்டிருக்கிற போதிலும் கூட, நீங்களே அவருடைய கண்மணியாய் இருக்கிறீர்கள். [apple of His eye]. அவர் என்ன செய்து கொண்டிருந்தாரோ அதை நிறுத்தி விட்டு, உன்னையும் என்னையும் தூக்கியெடுத்து, கல்வாரி என்றழைக்கப்படும் மலையின் மீது வைத்து, நம்முடைய சேதப்பட்டிருந்த கனிக்கான முழுத் தொகையையும் செலுத்தி விட்டார்.

ஆம், யாரோ ஒருவருடைய சிந்தனைகளில் இருப்பதே, இருப்பதற்கு அருமையான இடமாகும்; இருப்பதற்கு பாதுகாப்பான இடம் எதுவெனில் யாரோ ஒருவருடைய ஜெபங்களில் இருப்பதாகும்; இருப்பதற்கு மிகச் சிறந்த இடம் எதுவெனில் தேவனுடைய கரங்களில் இருப்பதேயாகும்!

**ஆகையால் ஆப்பிள்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!**
**தங்கப்பிரமாணம் - குணவிருத்தியில் ஒரு பாடம்.** ***



# வேதாகம வினா பெட்டி
Bible Question Box

## சிறு பிள்ளைகளை தேவன் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்கிறாரா?

**கேள்வி:** கைக்குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளாக மரித்தவர்களை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்வது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியா?

**பதில்:** இல்லை, இயேசுவை ஒருவன் தன்னுடைய சொந்த தனிப்பட்ட இரட்சகராக விசுவாசிப்பதின் மூலமே தவிர பரலோக ராஜ்யத்துக்கான வழி வேறெதுவும் இல்லை. ஒருவன் வயதுள்ளவனாகும் வரையில் ஒருவகையில் இது செய்யக்கூடியது அல்ல. அவர்கள் மரணம் அல்லது ஜீவனுக்கான சோதனையில் வைக்கப்படவும், பயத்தோடும் நடுக்கத்தோடும் அவர்களுடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவும் அல்லது அவர்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாவதற்கும் போதுமான வயதுள்ளவர்களாக வில்லை. (பிலி. 2:12; ரோம. 12:2). வேதாகமம் குறிப்பிடு வதையும் கூட நாம் கருத்தில் கொள்ள வேண்டும்: "**மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.**" எனவே காணக்கூடாத ஆவி ஜீவிகளாக சிறு குழந்தைகள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கவோ, காற்றைப் போல வந்து போகவும் முடியாது. (யோ. 3:6-8). "**சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடை பண்ணாதிருங்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது**" என்ற மத். 19:14-லுள்ள இயேசுவின் வார்த்தைகளை நமது கவனத்திற்கு கொண்டு வருவதின் மூலமாக இந்தக் காரியத்தைப் பற்றிய நம்முடைய நியாயவிவாதத்தைக் குறித்து சிலர் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள்.

இதன் ஒத்த வாக்கியங்களான மாற்கு 10:14; லூக். 18:16 - ஐயும் நாம் கவனிக்க வேண்டும். அங்கே, பரலோக ராஜ்யம் சிறு பிள்ளைகளால் உருவாக்கப்பட்டது என இயேசு போதிக்கவில்லை. மாறாக சில வகைகளில் குழந்தைகளைப் போலான விசுவாசிகள் மட்டுமே பரலோக ராஜ்யத்தை அடைவார்கள் என்பதையே அவர் போதித்து கொண்டிருந்தார். மாற்கு 10:15 மற்றும் லூக். 18:17 ஆகியவற்றின் சூழ்நிலைப் பொருத்தம் இதைக் காண்பிக் கிறது, ஏனெனில், அங்கே இயேசு "**எவனாகிலும் சிறுபிள்ளையைப் போல தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை**" என்று கூறினார். மத். 18:1-4; மாற். 9:33-37; லூக். 9:46-48 ஆகிய ஆகியவைகளையும் கவனிக்கவும். ஒரு சிறு பிள்ளையின் விசேஷித்த குணங்கள், எளிமையான இருதயம், பிரியப்படுத்துவதில் உள்ள விருப்பம், பரிசுத்த மில்லாத நோக்கம் மற்றும் பழிவாங்குதலிருந்து விடு-பட்டிருத்தல், விசுவாசம், அன்பு, கற்றுக்கொள்ளப்படத்தக்க தன்மை, சமூக வேறுபாடுகளையும் பிரபலமான கருத்துக் களையும் புறக்கணித்தல் மற்றும் கபடற்ற தன்மை ஆகியவையாகும். இயேசு தம்முடைய சீஷர்கள் எல்லாரிடமும் இருக்க வேண்டும் என்று விரும்பிய சில குணங்கள் இவைகளே. மேலும் இவைகளைக் கொண்டி ருக்கிற சீஷர்கள் மட்டுமே பரலோக ராஜ்யத்திற்கு தகுதி பெற்றிருக்கிறார்கள். "**சகோதரரே, நீங்கள் புத்தியிலே** (புரிந்து கொள்வதிலே) **குழந்தைகளாயிராதேயுங்கள். துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலே** (புரிந்து கொள்வதிலே) **தேறினவர்களாயுமிருங்கள்**" (1 கொரி. 14:20 NKJV) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்.

# மரித்துப் போகின்ற சிறுபிள்ளைகளுக்கான தேவனுடைய திட்டம்

**கேள்வி:** அப்படியானால், கைக்குழந்தைகள் அல்லது சிறுபிள்ளைகளாக மரிப்பவர்களுக்கு தேவனுடைய ஏற்பாடு என்ன?

**பதில்:** "**இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று**" என்றபடி, தகப்பனாகிய ஆதாமின் மூலமாக மனுக்குலத்தின் மீது கொண்டு வரப்பட்ட மரணாக்கினையின் கீழ் பிறந்திருப்பதாலும், ஆதாமின் சந்ததியில் பிள்ளைகளாக இருப்பதாலும், சிறுபிள்ளைகளும், அதுபோல ஆதாமின் சந்ததியான மற்றவர்களும், உணர்வற்ற நித்திரையாகிய மரணத்திற்குள் போகும்படி தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். "**மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்**" என்று பிரசங்கி 9:5 கூறுகிறது. மரித்த சிறுபிள்ளைகளும் நிம்மதியாக "**நித்திரையாயிருக்கிறார்கள்.**" அதாவது அவர்கள் "**இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களாய்**" வாக்குத்தத்தம் செய்யப்பட்ட உயிர்த்தெழுதலின் காலத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓ, குறித்த காலத்தில் இயேசுவின் இரண்டாம் வருகையின் காலத்தின்பொழுது, உயிர்த்தெழுதலில், மரண நித்திரையில் இருந்து தேவன் அவர்களை வெளிக்கொண்டு வருவார். (1 தெச. 4:13,14; தானி 12:2). அப்பொழுது இயேசு அழைக்கும்போது, "**பிரேதக் குழிகளிலுள்ள** (மரித்த சிறுபிள்ளைகள் உட்பட) **அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும், அப்பொழுது... எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்**" (யோ. 5:28,29; ஏசா. 26:19).

அவர்கள் போன வண்ணமாக "**பூமியிலிருந்துண்டான மண்ணானவனாக**" திரும்பி வருவார்கள். ஏனெனில் "**மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்.**" "**மண்ணானவன்** (ஆதாம்) **எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே.**" (1 கொரி. 15:48). "**அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து** (ஆதாமிய மரணம் - 1 கொரி. 15:26) **திரும்பி** (உயிர்த்தெழுதலில்) **வருவார்கள்.**" மரித்த தன்னுடைய பிள்ளைகளுக்காக ராகேலின் அழுகை மூலமாக நமக்கு பெரிய வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "**உன் முடிவைப் பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு, உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்கு** (ஆங்கிலத்தில் border-எல்லைக்கு என்று உள்ளது.) (அவர்களுடைய குடும்ப வட்டத்திற்கு அல்லது எல்லைக்கு) **திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" (எரே. 31:16,17). அப்பொழுது தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைத் துல்லியமாக அறிகிற அறிவும் (1 தீமோ. 2:4; ஏசா. 11:9; எரே. 31:34) மனுஷீக பூரணத்திற்கு பரிசுத்த பெரும்பாதையில் செல்வதற்கான வாய்ப்பும் (ஏசா. 35:8-10) அவர்களுக்குக் கொடுக்கப்படும். அந்த நேரத்தில் மற்றவர்களோடு இவர்களும் தேவனுடைய வழிநடத்துதலுக்கு சரியாக செவிசாய்ப்பார்களானால், "**செம்மறி ஆடு**" வகுப்பாரின் (மத். 25:34) ஒரு பாகமாக, முடிவில் நித்திய ஜீவனைப் பூமியில் பெறுவார்கள். அவர்கள் சரியாக செவிசாய்க்க மனப்பூர்வமாகத் தவறினால், முடிவில் ஜனங்களிலிராதபடி அழிக்கப்படுவார்கள். (அப். 3:23; வெளி. 20:7-9,15; 21:8). கைக்குழந்தைகளாகவோ அல்லது சிறு பிள்ளைகளாகவோ மரிக்கிறவர்கள் எல்லாருக்குமான தேவனுடைய அற்புதமான ஏற்பாட்டிற்காக அவருக்கு ஸ்தோத்திரம்.




"அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." மத். 16:24.

# "என் தாசனையல்லாமல் குருடன் யார்?"

**கேள்வி:** "**என் தாசனையல்லாமல் குருடன் யார்? நான் அனுப்பிய தூதனையல்லாமல் செவிடன் யார்? உத்தமனையல்லாமல் குருடன் யார்? கர்த்தருடைய ஊழியக்காரனையல்லாமல் அந்தகன் யார்? நீ அனேக காரியங்களைக் கண்டும் கவனியாதிருக்கிறாய்: அவனுக்கு செவிகளைத் திறந்தாலும் கேளாதே போகிறான், கர்த்தர் தமது நீதியினிமித்தம் அவன் மேல் பிரியம் வைத்திருந்தார்: அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்**" என்று ஏசா. 42:19-21 -ல் நாம் வாசிக்கிறோம், இது யாருக்கு பொருந்தும்?

**பதில்:** ஒரு தீர்க்கதரிசனமாக இந்த வேத வாக்கியங்கள் முதல் நிலையில் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கும், இரண்டாவதாக அவருடைய உண்மையான பிரதிஷ்டை செய்த பின்னடியார்களுக்கும் பொருந்துகிறதாகத் தெரிகிறது. இவர்கள் சில காரியங்களுக்கு குருடாகவும் செவிடாகவும் இருக்க வேண்டும் - பூமிக்குரிய ஆசைகளுக்கும், எதிர்ப்பார்ப்புகளுக்கும் மேலும் உலக ஞானத்திற்கும் குருடாயிருப்பதோடு, தேவனுக்கு உண்மையுள்ள ஊழியத்தை (மத். 4:10) நிறைவேற்றத் தடையாயிருக்கக் கூடிய உலகத்தின் மயக்கங்களுக்கும் கவர்ச்சிகளுக்கும் குருடாயிருக்க வேண்டும். மேலும், மாம்சத்தின் வேண்டுகோள்களுக்கும், தங்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளை நிறைவேற்றுவதில் இருந்து பின்வாங்கச் செய்து சிதறடிக்கும் மாம்சத்தின் சுயநலமான ஆசைகளுக்கும் செவிடாக இருக்க வேண்டும். (சங். 40:8; நீதி. 23:26; மத். 16:24; ரோம. 12:1).

இங்கே குறிப்பிடப்படும் குருட்டுத்தன்மை என்பது அறியாமையின் குருட்டாட்டத்தை குறிப்பிடவில்லை. ஏனெனில் அநேக காரியங்களைக் கண்டும் அவைகளை கவனியாமலிருக்கிறார்கள் (புறக்கணித்தல் அல்லது கவனத்தில் எடுக்காதிருத்தல்) என்று வசனம் 20 காண்பிக்கிறது. கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் பூமிக்குரிய மேன்மைகளை காணாதிருக்கிறார்கள் என்று அல்ல, ஆனால் அப்படிப்பட்ட எல்லா பூமிக்குரிய

கவர்ச்சிகளையும், அவர்கள் வேண்டுமென்றே மறுத்து தங்களுடைய கண்களை மூடிக்கொள்கிறார்கள். தங்களுடைய ஆவிக்குரிய செவிசாய்த்தலில் (கேட்குதலில்) இவர்கள் கவனமாய் இருக்கிறார்கள். (மத். 13:16). ஆனால் தங்களுடைய எஜமானரிடத்தில் இருந்து வெளியே நடத்திச் செல்லும் ஒரு அந்நியனுடைய சத்தத்துக்குச் செவிகொடார்கள் (கவனியார்கள்). (யோவா. 10:4,5,27). பாவம், தப்பறை, சுயநலம் மற்றும் உலகத்தனத்தின் நுழைவு வழிகள் மூலமாக சாத்தானும் அவனுடைய ஊழியக்காரரர்களும் அவர்களுடைய காதுகளில் இரகசியமாகப் பேசுகிற "இன்பமானவைகளுக்கு" செவிடாயிருக்கிறார்கள்.




“**உத்தமனையல்லாமல் குருடன் யார்**” (சமாதானமாயிருப்பவன் A.R.V., Young's Literal Translation; an intimate friend, நெருங்கிய நண்பன் Rotherham மொழிபெயர்ப்பு). இங்கே உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் எபிரேய வார்த்தையானது, ஓர் முழுமையான சரணடைதல் அல்லது அர்ப்பணித்தலைக் குறிக்கிறது அதாவது தெய்வீக சித்தத்தோடு உடன்பட்டு அதற்கு (தெய்வீக சித்தத்திற்கு) முழுமையாக அல்லது பூரணமாகக் கீழ்ப்படிவதைக் குறிக்கிறது.

இவ்வித குருட்டுத்தனத்திலும் செவிட்டுத்தனத்திலும் யேகோவா மிகவும் பிரியமாயிருக்கிறார். அவருடைய நீதியினால், இயேசு நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டது மாத்திரமல்லாமல், ஆனால் அதை பெரிதாக்கி மேன்மைப் படுத்தினார். அதாவது, யூதர்கள் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருந்ததைவிட பெரிதான விகிதாச்சாரத்தில் அதனைக் காண்பித்தார்; அதாவது நியாப்பிரமாணமானது விழுந்துபோன மனுஷீகத்தின் திறமையினால் நிறை வேற்றுவதற்கு எட்டாத நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தில் இருப்பதைக் காண்பித்தார்; மேலும் அந்த நியாயப்பிரமாணத்தை கனமுள்ளதாக்கினார். இஸ்ரயேலர்கள் பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாக தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ள முயற்சித்து, தேவனுக்கு பிரியமான வழியில் யாரேனும் அதை கைக்-கொள்ள கூடுமோ என்று சந்தேகிப்பதற்கு நியாயம் கூறினார்கள். ஆனால் உண்மையென்னவெனில், இயேசு அதை பூரணமாகக் கைக் கொண்டார், அவர் அதை கைக் கொண்டது சம்பந்தமாக தேவன் திருப்தி அடைந்தார். அது நியாயப்பிரமாணத்தை கனமுள்ளதாக்கியது. அதாவது அது ஒரு நியாயமற்ற கட்டளையல்ல என்றும் பூரண மனிதனுடைய திறனுக்கு அப்பாற் பட்டதல்ல என்றும் நிரூபித்தார். இவ்வாறாக கைக்கொள்ள முடியாத ஒரு பிரமாணத்தை தேவன் கொடுக்கவில்லை, ஆனால் தேவன் அவர்களுக்கு அளித்த ஆதி பூரணத்தை இழந்த மனுக்குலத்திடம் தான் குறை இருக்கிறது என்ற உண்மை நிரூபிக்கப்பட்டு விவரிக்கப்பட்டது. கிறிஸ்துவின் புண்ணியத்தை நமக்கு சாட்டுதல் செய்ததற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். “**ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.**” “**மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.**” (ரோமர் 8:1,4). தேவனுக்கு ஸ்தோத்திரம்! ***

## LHMM General Convention at Nazareth - 2017 (Oct-13,14,15)

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் ப்ரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். சங். 133.**

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

Bro. V. Vincent Jeyakumar

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY